# வறுமை மற்றும் அபிவிருத்தி பற்றிய விளங்கிக்கொள்ளல்:

## பத்திரிகையாளர்களுக்குரிய ஒரு கடினமான கையேடு



centre for poverty analysis

# வறுமை மற்றும் அபிவிருத்தி பற்றிய விளங்கிக்கொள்ளல்:

## பத்திரிகையாளர்களுக்குரிய ஒரு கடினமான கையேடு

கையேடு தயாரிப்பு:
நாலக குணவத்தன
வறுமை ஆராய்ச்சி நிலையத்துக்காக - (CEPA)

மொழிபெயர்ப்பு:
க. கிருஸ்ணராஜ்

நிதியுதவி - UNESCO
வறுமையினை விசாரிப்பதற்கு ஊடகங்களின் திறன்களை கட்டியெழுப்பும் திட்டம்

செப்ரம்பர் 2016

# வறுமை மற்றும் அபிவிருத்தி பற்றிய விளங்கிக்கொள்ளல்:
## பத்திரிகையாளர்களுக்குரிய ஒரு கடினமான கையேடு


1. அறிமுகம்
2. வறுமை ஒரு பெருங்கதையாக
3. ஏழை ஊடகவியல் ஏழைகளை நிராகரித்தல்
4. வறுமையினை விளங்கிக்கொள்ளல் : பறவைக்கண் பார்வை
5. வறுமையினை விளங்கிக்கொள்ளல் : ஒரு கீழ் மட்டப்பார்வை
6. வறுமையினை அறிக்கைப்படுத்தல் : அபிவிருத்தி ஊடகவியல்
7. வறுமையினை அறிக்கைப்படுத்தல் : சவால்கள் மற்றும் தந்திரோபாயங்கள்
8. புதிய வழி தேடுனர்களின் உள்ளுணர்வு: P . சைநாத்
9. புதிய வழி தேடுனர்களின் உள்ளுணர்வு: கல்பனா சர்மா

# 1. அறிமுகம்

இலங்கை நடுத்தர வருமான நாடாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சமூகத்துறை மீதான பொதுச்செலவீனமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு சதவீதமளவிற்கு குறைந்திருக்கிறது மற்றும் இது பரந்தளவில் சமத்துவமின்மையையும் உருவாக்கியுள்ளது. அதனால் வறுமை, இன்னும் முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது ஆனால் மக்களின் திறமைகள், தனியார் மற்றும் சமூக சொத்துக்கள், ஓய்வு நேரம் (அல்லது அதன் குறைவு) மற்றும் சமூக பங்குபற்றல் மற்றும் பாதுகாப்பினை அடைதல் போன்ற அம்சங்களை கருத்தில் கொள்ளும் முழுமையான கண்ணோட்டத்தில் இருந்து விளங்கிக்கொள்ளப்படவேண்டிய தேவை இருக்கின்றது.

எனினும், அனேகமான ஊடகங்கள் குறைந்தளவான பணவசதி எனும் பொருளாதார கண்ணோட்டத்திலேயே வறுமையினை பார்க்கின்றன. வறுமை பற்றிய விரிவான விளங்கிக்கொள்ளலானது, மக்கள் தங்களது முழுத்தேவைகளை அவர்களது திறன்களுக்கு உட்பட்டு உணர்ந்து கொள்வதற்கான ஜனநாயகம், நல்லாட்சி, சட்ட ஒழுங்குகள், உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரம் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. மேலும் வறுமை பற்றிய விளங்கிக்கொள்ளலினை வரையறுப்பதற்கு, அனேகமான ஊடக நிறுவனங்கள் வறுமையுடன் தொடர்புடைய தலைப்புக்களுக்கான கள மட்ட மற்றும் ஊடக செயன்முறை விசாரணைகளுக்காக குறைந்த நிதி ஒதுக்கீட்டினை வழங்குகின்றது அல்லது ஒதுக்கீடு செய்வதில்லை.

வறுமை மற்றும் அபிவிருத்திக்கான ஊடக உதவித்தொகையுடன், வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA) இவ் இடைவெளியினை சமாளிக்க நம்புகின்றது.

இவ்வுதவித்தொகையானது, வறுமையின் பல பரிமாணங்கள் பற்றிய தெளிவான விளங்கிக்கொள்ளலை வழங்குவதன் மூலமும் வழிகாட்டலுக்கு கீழ் வறுமையின் அம்சங்கள் பற்றி அறிக்கைப்படுத்துவதன் மூலமும் போட்டிரீதியாக தெரிவு செய்யப்பட்ட பதினைந்து *(15)* ஊடகவியளாலர்களை ஊக்கப்படுத்துவதாக இருக்கின்றது.

உதவித்தொகையின் வெற்றியாளர்கள் சிரேஸ்ட ஊடகவியளாலர்களுடனும், அபிவிருத்தி ஆய்வாளர்களுடனும் நேருக்கு நேர் உரையாடுவதிலிருந்து பயன்களைப் பெறுவார்கள் அத்துடன் அவர்களது களப்பயணத்திற்கான செலவினை ஈடுசெய்யக்கூடிய பணத்தொகையினயும் பெறுவார்கள். அவர்கள் தாங்கள் தெரிவு செய்வதின் கதையினை ஆழமாகவும் விரிவாகவும் கற்பதற்கான வாய்ப்பினையும் பெறவுள்ளனர். ஆனால் அவர்களது கதையினை அவர்களுடைய ஊடகமே வெளியே எடுத்துச்செல்லும் என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இக்கையேடானது உதவித்தொகையின் ஒரு பகுதியாகவே தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இது வெறுமனே இலங்கையில் வறுமை தொடர்பான தகவல்களை மட்டும் சேகரிப்பதாக இருக்காது.

இது அடிப்படையில் அச்சு, ஒளிபரப்பு அல்லது இணைய ஊடகவியல்களில் தமது வாழ்வை அர்ப்பணித்த ஊடக நிபுணர்களை இலக்கு வைக்கின்றது. இது அவர்கள் ஊடகவியல் எனும் கைத்திறனில் பயிற்சிகளை மற்றும்∴அல்லது அனுபவங்களை பெற்றிருப்பதாக அனுமானிக்க முடிகிறது. இது மட்டும் அவர்கள் எப்படி தேடி வறுமை, கீழ் நிலை அபிவிருத்தி மற்றும் சமத்துவமின்மை பற்றிய நல்ல கதைகளை சொல்லுதற்கான திறனைச் சேர்க்கிறது.

# 2.வறுமை ஓர் பெருங்கதையாக

**“ஒரு பதிப்பாசிரியராக எனக்கு, வறுமையை ஊக்கப்படுத்துகின்ற ஒரு விடயம் இருக்கின்றது. கல்வி மற்றும் கல்வித்தரத்தினை அதிகரிப்பது என்பது எனது தலைமைத்துவத்தின் அளவினை அதிகரிப்பதுடன் தொடர்புபட்டிருக்கிறது. எங்களுடைய பார்வையாளர்கள் நடுத்தர வர்க்கங்கள், வியாபாரங்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் போன்றோரினால் உண்மையாக வரையப்பட்டுள்ளது. ஆனால் இந்தக்குழுக்கள் தனிமையில் வாழமுடியாது. பலருடைய நலன்புரியானது, நாளாந்த நட்சத்திரங்களை பற்றி வாசிக்கும் மக்களின் ஆர்வத்தில் இருக்கின்றது.”**

**மக்புஸ் அனாம்,*Daily Star* செய்தித்தாளின் பதிப்பாசிரியர் மற்றும் வெளியீட்டாளர். பங்களாதேஸ்**

அனேகமான ஊடகங்களின் வெளிப்பாடுகளின் “பிரச்சனை இராடர்” இல், வறுமை மற்றும் இடர்பாடுகள் இருப்பதில்லை. ஏனெனில் பிரச்சனைகள் தொடர்பான கதைகள் அழுத்தம் கொடுப்பதாகவும், சலிப்பை ஏற்படுத்துவதாகவும் அல்லது தொடர்பில்லாத்தாகவும் இருப்பதாக கொண்டிருக்கின்ற கருத்தினால் ஒரு பரந்துபட்ட வகையில் இடம்பெற்றுள்ளது.

அது ஒரு தவறான கருத்து. போதுமான ஆழத்துடனும், உணர்திறன் மற்றும் அனுதாபத்தோடும் அவற்றை உள்ளடக்கினால், வறுமையுடன் தொடர்பான கதைகளை மூலம் எமது ஊடக பார்வையாளர்களுக்கு ஒளியூட்டல்களையும் துண்டுதல்களையும் பன்முகப்பட்ட வகையில் வழங்க முடிந்திருக்கும். மேலும் இவ்வாறான வறுமையுடன் தொடர்பாக கதைகளை சுவாரசியத்துடனும், ஈர்க்கப்டும் வகையிலும் சொல்வதற்கான பல வழிகள் இருக்கின்றன.

மாபுஸ் அனாம் போன்ற பதிப்பாசிரியர்கள் குறைவு. அனேகமாகன நேரம், ஊடகவியளார்கள் வறுமையுடன் தொடர்பான கதைகள் மற்றும் சமூக நீதி போன்றவை மதிப்புள்ள விடயங்களாக இருக்கின்றன என்பதனை பதிப்பாசிரியர் ஏற்றுக்கொள்ள வைப்பதற்கு கடுமையாக முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது. இந்தியாவில் (400 மில்லியன் மக்கள் வறுமையில் வாழும் வீடு) ஒரு ஆங்கில மொழி பத்திரிகையின் பதிப்பாசிரியர் ஒரு தடவை “நாங்கள் ஏழை மக்கள் தொடர்பான கதைகளில் நாங்கள் ஆர்வம் இல்லை ஏனெனில் ஏழை மக்கள் எங்கடைய தலைவர்களுக்கு மத்தியில் இருப்பதில்லை” எனக் குறிப்பிட்டிருந்தார்.

எங்களுடைய நேரத்தில் ஒரு பெரிய கதையில் இது போன்று தவறவிட்டுள்ளோம்: பல தசாப்தங்களான கொள்கைத் தலையீடுகள், அபிவிருத்திக்கான உதவிகள் மற்றும் தொண்டு வேலைகள் இருந்த போதிலும் எப்படி மற்றும் எவ்வாறு வெவ்வேறு கோணத்தில் வறுமை இருக்கின்றது. இவர்களும் அண்மைய ஆண்டு உண்மைகளை புறக்கணிக்கின்றனர், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மில்லியன் கண்கான குடும்பங்கள் பரிதாபகரமான வருமான வறுமைக்குள் வந்திருக்கின்றன.

சரியான பொருளாதார மற்றும் சமூக சூழ்நிலைகளை எடுத்தால் வறுமை ஒரு பெரும் கதையாக இருக்கிறது மற்றும் இருக்க வேண்டும். குறைவான பணம் என்பது ஒருபோதும் வறுமையாகாது மற்றும் மனிதனுடைய அடிப்படை தேவைகளைக் பெற்றுக்கொள்ள அல்லது அணுக முடியாத நிலை. காணியுரிமை, சிறந்த விநியோகம் மற்றும் பெண்கள் உரிமை போன்றவை பரந்தளவில்

வறுமையை குறைப்பின் கலந்துரையாடலுக்கான ஒருங்கிணைந்த பகுதிகளாக இருக்கின்றன.

வறுமை ஏன் நீடிக்கின்றது மற்றும் எப்படி அதிலிருந்து மீண்டு வருவது என்பதனை விளங்கிக்கொள்வதற்கு, நாங்கள் பெரிய அளவில் பார்க்க வேண்டியுள்ளது. வறுமையினை ஊடகத்தில்ளஉள்ளடக்குவதானது ஏனைய ஒரு எண்ணிக்கையான விளையாட்டுக்களை விட பிரதானமானது (அதன் பகுதியில் புள்ளிவிபரங்கள் முக்கியத்துவமாக இருந்தாலும்). அது ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையை வேண்டுகிறது அதாவது சிறியளவான உட்பார்வைகளுடன் பெரும்காரணிகளையும் ஒருங்கிணைக்கின்றது. எல்லாவற்றையும் விட , ஊடகவியளாலர்கள் ஒரு திறந்த மற்றும் அறிந்து கொள்வதற்கான மனநிலையினை கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.

அபிவிருத்தி தொடர்பான வேற்றுமைகள் அரசியல்மயமானதாக இருக்கின்றன. இலங்கையில், ஏதாவது அரசியல் கலந்துரையாடல்கள் அரசியல் கட்சிப்பதவிகளுக்கு மத்தியில் கருத்தியல் மற்றும் ஒரு பிரிவுக்கு இடையிலான ஒரு முனைவாக்கத்தில் விரைவாக இறங்குகின்றது. இந்த வகையில், பொதுவான ஆணுக்கும் பெண்ணுக்கும் யார் பேசுகின்றனர்? மற்றும் ஒரு முக்கியத்திற்கு யார் ஒருநியாயமான விசாரணையைப் பெறுகிறார்?

இலங்கையில் அரசியல் அதிகாரம் மற்றும் ஆட்சியின் உயர் அணிகளில் அவர்கள் பாரியளவில் கீழ் மட்டத்தில் விளையாடிக்கொண்டிருக்கும் போது “ மற்றும் சிலநேரம் முற்றிலும் மறுக்கும் போது - நாங்கள் உரிய நேரத்தில் வறுமை, சமத்துவமின்மை மற்றும் சமூக அநீதி பற்றி எவ்வாறு முழுமையான கருத்துடன் பேச இருக்கிறோம்,

ஊடகவியலாளர்களும் அவர்களது செய்தி ஊடகங்களும் வறுமை மற்றும் அபிவிருத்தி மீதான கலந்துரையாடல் மற்றும் விவாதங்களை தூண்டுவதற்கும் பாதுகாப்பதற்கும் என அளவிற்கு வாய்ப்புக்கள் உள்ளது. இலங்கையில் இவ்வாறான உரையாடல்களை செய்வதற்கு இதுவே தீர்க்கமான நேரமாகும்.

பின்வரும் பெரும்மாற்றங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.:

- இலங்கை ஒரு நடுத்தர வருமான நாடாக வந்துகொண்டிருத்தல்
- நாட்டின் சனத்தொகை, முழுமையாக, பழமை பெறுகின்றது
- நகர் பகுதியில் அதிக மக்கள் வாழ்தல், முன்பை விட அதிக அபிலாஷைகளுடன் மற்றும்
- சமூகம் அதிக இணைப்பானதாக வந்து கொண்டிருக்கின்றன பரந்த தொடர்பாடல் தொழிநுட்பத்திற்கு நன்றி.

இந்த மாற்றங்கள் ஆய்வாளர்களுக்கும் செய்ற்பாட்டாளர்களுக்கும் எவ்வாறு கற்பது, பகுப்பாய்வு செய்வது மற்றும் வாதாடுவது போன்ற மாற்றங்களுக்கு சவாலாக அமைகிறது. பழைய கட்டமைப்புக்கள் போதுமானதாக இருக்காது. தார்மீக தடுமாற்றம் மற்றும் நெறிமுறை சவால்களை உருவாக்க அதிகமான சிக்கல் நிறைந்த சூழ்நிலைகள் விரிந்து வருகின்றன. இத்தலைப்புக்களுக்கு பின்னால் கவனமெடுக்கும் ஊடகவியலாளர்களுக்கு, அதிகமான கதைகள் கவனத்தில் கொள்ளப்பட்டாலும், விளங்கிக்கொள்ளவும் தொடர்புபடுத்தவும் இருக்கின்றன. திறந்த மனதுடன் ஆராய்ந்து பகிரவும்.,

# 3. ஏழை ஊடகவியல் ஏழைகளை நிராகரித்தல்

இது இலங்கையில் மட்டும் இல்லை அல்லது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மட்டுமில்லை, பல ஊடகங்கள் வறுமை தொடர்பான பிரச்சனைகளை கண்டுகொள்வதில்லை.

அம்மு ஜோசப், பங்காளதேஸில் வசித்த ஒரு சுதந்திரமான பத்திரிகையாளர், இவர் இந்தியரின் ஊடகங்களுடைய வறுமை மற்றும் அபிவிருத்தி பற்றிய உள்ளடக்கங்களைப் பற்றி நீண்ட காலமாக கண்கானித்து விமர்சித்திருக்கிறார். இவர் 2007ல், பகுபாய்வு மற்றும் காரணிகளை கோடிட்டு காட்டுவதனை விட எப்படி அதிகமான சம்பவங்களுக்குள்ளும் நிகழ்வுகளுக்குள்ளும் அடங்கியிருக்கின்றன என எழுதினார்.

"வறுமையின் பல முகங்களுக்காக கடந்த ஆண்டுகளில் அதிக தொகையான பணம், மிகுதியான கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பொது மக்கள் ஏன் என்று விளங்கிக்கொள்ள உதவுவதற்கு, வெளிப்படையாக பல விசாரணை செய்யும் ஊடகங்கள் இருக்கின்றன. இந்தியா " உலக பொருளாதார தடையின் புதிய குழந்தை " பசி, தாய்சேய் மரணம் மற்றும் வறுமையினுடைய பல வேறு குறிகாட்டிகள் என்பவற்றில் இன்னும் ஒரு உலகத்தலைவராக இருப்பதற்கான வேறுபாடுக்ளைக் கொண்டுள்ளது. அத்துடன் செய்தித்தாள்கள் மற்றும் 24x7 செய்தி அலைவரிசைகள் ஒழுங்கான மேம்படுத்தப்பட்ட பங்குச்சந்தைகள், வெளிநாட்டு நாணயமாற்றம் மற்றும் தங்கத்தின் விலை, காலநலை, சனத்தொகை போன்றவற்றை வழங்க முடியும் என்றால் நிச்சயமாக அவர்களால் ஒரு வறுமை பற்றிய பார்வை அல்லது மக்களின் விழிப்புணர்வை அதிகரிக்க குறைந்தது ஒரு மில்லேனியம் அபிவிருத்தி இலக்கு பார்வையேனும் வழங்க முடியும். "மற்றும் மக்களின் கருத்துக்களை உருவாக்கலாம்---இந்த அபிவிருத்தியில் விமர்சன பகுதியில் இந்தியாவின் செயல்திறன்?"[1]

இந்தப்போக்கு அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் காணப்பட்டுள்ளது. இவைகளுக்கு வறுமை தொடர்பாக சொந்த சவால்களை கொண்டிருக்கின்றன.

2013 இல் சைமன் குபேர் Financial Times (UK) இல் எழுதியிருந்தார்: "வறுமை ஒருபோதும் கவர்ச்சியாக இருப்பதில்லை. 2008 இல் ஜோசப்ரொன்ரி மன்றம் (Joseph Rowntree Foundation) பிரித்தானிய தொலைக்காட்சியின் 40 மணித்தியாலங்களை பகுப்பாய்வு செய்து "வறுமை" எனும் சொல் இரண்டு தடவைகள் மாத்திரம் இரண்டு நிகழ்ச்சிகளான "வெக்கமற்ற" (Shameless) மற்றும் காமெடி நாடகத்தில் இடம்பெற்றிருந்த்தாக கண்டுபிடித்தது . ஒரு தரம் லைவ் எய்ட் கச்சேரியில் ஒரு புத்தகம் இருந்தது மற்றயது கோமிக் நிவாரணத்திற்கு இருந்தது. ஏழைகள் மக்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சிக்கான நேரத்தைப் பெற்றுக்கொண்ட போது, இது ஜெர்ரி ஸ்ப்ரிங்கர் போன்ற நிகழ்ச்சிகளில் ஏளனப் பொருட்களைப் போலவே அடிக்கடி பார்க்கப்பட்டனர்."

[1] Is the media watching poverty enough? Ammu Joseph. *India Together.* 29 October 2007. http://indiatogether.org/medpov-op-ed

அவர், லண்டனில் சமத்துவமின்மை பற்றிய தீவிரமான ஊடக விவாதம் ஒன்று அங்கு இடம்பெற்றதாகவும் அது சமூகத்தில் இருந்த 1% மான பணக்காரர்களை அதிகம் கவனத்தில் கொண்டிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

ஊடகங்களில் அதிகம் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டவர்களாக "கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பல அரசியல்வாதிகள் - கோடீஸ்வரர்கள் வறியவர்கள் கூட்டு சொல்லாகவே குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்.

ஊடகவியலாளர்கள், ராஜா ராணியரின் கதைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலிருந்து விலகிய பரம்பரையில் வந்த வரலாற்றாளர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என இவர் வாதிட்டுள்ளார். இதற்கு உதாரணமாக பிரித்தானிய வரலாற்றாளர் மற்றும் எழுத்தாளர் E.P. தோம்சன் (1924-1993) என்பவரைக் குறிப்பிட்டுள்ளார். இவர், ஆங்கில தொழிலாளர் வர்க்கத்தின் உருவாக்கத்தில்," சந்ததியினருடைய மகத்தான அருளிலிருந்து "(from the enormous condescension of posterity).[2] தொழிலாளிகளில் நீண்ட காலத்திற்கு முன் இறந்து போனவர்களை பாதுகாக்க வழிசெய்துள்ளார்.

ஐக்கிய இராச்சியத்தில் விடயங்கள் மிகவும் நன்று இல்லை. இருந்த போதிலும் 46.7 மில்லியன் அமெரிக்கர்கள் "ஏறத்தாழ 15% - 2014 இல் வறுமையில் வாழ்ந்தார்கள். உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின் பிரகாரம், உள்நாட்டு மற்றும் வெள்நாட்டு வறுமை அமெரிக்க ஊடகங்களில் போதுமான அளவு ஆழமாகவும் விபரமாகவும் உள்வாங்கப்படவில்லை.

## கதை உருவாக்கத்துக்கான வழிகள்

2000 இல், நியுயோக் டைம் க்கான பத்திரிகையாளர் ரினா ரோஸன்பேர்க், ஞாயிறு இதழில் உலகின் வறிய நாடுகளைத் தாக்கும் எயிட்ஸ் கொள்ளை நோயைப்பற்றி எழுதியிருந்தார். அவர் மருந்து பாவிப்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டும்,அதற்கான செலவை தாங்கிக்கொள்ள முடியாமையினாலும் 12 பேருக்கு ஒருவர் என எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்படும் இளைஞர்கள் வாழும் உப-சகரன், ஆபிரிக்காவில் மருந்து தயாரிப்பு தொழிற்சாலைகள் எவ்வாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்தது என்பதனை காட்டியிருந்தார்.

அவருடைய பதிப்பாசிரியரின் பதிலானது: "மலாவியில் எப்படி ஒவ்வொருத்தரும் சாகப்போகிறார்கள் எனும் 7000 சொல் கதையில் என்னால் எமது தலைவர்களுக்கு கீழ்படிய முடியாது."

அவரது இதயமில்லாத பதிலுக்கு பிறகு, ரோஸன்பேர்க் அவரது கதையை அச்சிடுவதற்கான வழியை கண்டறிந்தார். நெருக்கடிக்குள் இருக்கும் நாடுகளைப்பற்றி எழுதுவதற்கு பதிலாக, அவர் மருந்து உற்பத்தியாளர்களிடமிருந்து வந்த அழுத்தங்களை தவிர்ப்பதற்கு எவ்வாறு ஒரு நாடு (பிரேசில்) முகாமைத்துவம் செய்தது என்பதில் கவனம் செலுத்தியிருந்தார். "எப்படி உலக எயிட்ஸ் நெருக்கடியை தீர்ப்பது எனும் தலைப்பில் முதற்பக்க கதையாக வெளிவந்த்து. இது மோசமான நிலைகளை குறிப்பிட்டிருந்தாலும் அதற்கா மாற்று நம்பிக்கையான வழிகளையும் முன்மொழிந்திருந்தது.

" இது வாகசகர்களை தூண்டவத, அவர்கள் மத்தியில் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் இருந்தது" ரோஸன்பேர்க் பின்னர் சமூகப்பிரச்சனைகளுக்கான பதில்களை பிரசுரிப்பதற்கு ஊடக இணைப்பு தீர்வகளை உருவாக்கினார்.

**Source :** http://alumni.berkeley.edu/california-magazine/just-in/2016-04-06/poor-journalism-media-coverage-poor-getting-better-or-worse

[2] Poverty's poor show in the media. Simon Kuper. *Financial Times*, UK. 29 March 2013. https://next.ft.com/content/6e8b7882-9672-11e2-9ab2-00144feabdc0

2016 இன் ஆரம்பத்தில் கலிபோனியா இதழில் Katia Savchuk குறிப்பிட்டிருந்தார், "ஏழை ஊடகவியலின் ஒரு பணக்கார மரபு இருந்தாலும்" ஜகப் ரிஸ் இன் "மீதி பாதி வாழ்க்கை எப்படி" என்பதிலிருந்து ஜேம்ஸ் ஆசீ இன் "பாவராவிலிருந்து புகழ்பெற்ற ஆண்கள் எங்களைப் புகழ்தல்" எரென்ரீச் இன் நிக்கல் மற்றும் வெள்ளி நாடகம் "அறிக்கைப்படுத்தல் குறைவாகவே உள்ளது. 2014 இல் அறிக்கைப்படுத்தலில் நேர்மை மற்றும் துல்லியம் தொடர்பாக ஒரு முற்போக்கான ஊடக கண்காணிப்புக்குழு, ஒரு 14 மாதங்களில் தங்களது நிகழ்ச்சி நிரலில் மூன்று முக்கிய செய்தி வெளியீடுகள் 0.2% அர்ப்பணித்திருந்தமையை கண்டுபிடித்து. அதேமாதிரி, சில ஆராய்ச்சி நிலையங்களின் ஊடகத்துறை மீதான பிரதானமான திட்டங்கள் 2007 தொடக்கம் 2012 நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் 52 பிரதான செய்தி வெளியீடுகளில் உள்ள கதைகளில் வறுமை பற்றிய உள்ளடக்கம் 1% க்கும் குறைவாகவே உள்வாங்கப்பட்டுள்ளது.

பல ஊடக நிறுவனங்களில் ஒரு நீண்ட கால நேசத்துக்குரிய நடைமுறையில் ஒரு புதிய கதை அல்லது அவர்கள் வேலை செய்ய விரும்பும் அம்சங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களே பதிப்பாசிரியர்களுக்கு சிபார்சு செய்யகிறார்கள். கதை உருவாக்கம் பற்றி அறிகையில், இந்த சவால்களுக்கு ஊடகவியலாளர்கள் ஊடகத்தின் தேவைகயை பூர்த்தி செய்யும் வகையில் ஒரு புதிய, உண்மையான மற்றும் சுவாரஸ்யமான கதை ஒன்றை கற்பனை செய்ய வேண்யிருக்கிறது.

ஒரு அணுகுமுறையாக மேற்கத்தைய ஊடகவியலாளர்கள் பொருளாதார சமத்துவமின்மையின் பிரச்சனைகளுடன் தொடர்பான வறுமை மற்றும் சமூக இடர்பாடுகளின் கதைகளுடன் தொடர்புபடுத்துவதற்கான உதவியினை கண்டுபிடித்துள்ளனர்.- நடுத்தர வர்க்கங்களினால் ஒரு கருத்து பரந்த அளவில் பகிரப்பட்டுள்ளது.

எட்வேட் வாஸ்சேர்மன் (Edward Wasserman), கலிபோனியா பல்கலைக்கழகத்தின் ஊடகவியலின் பேர்கெலே பட்டதாரிக் கல்வியின் பீடாதிபதி, 2008 அழுத்தத்தினை ஏற்படுத்திய நிதிநெருக்கடியிலிருந்து சமத்துவமின்மை பற்றிய உள்ளடக்கம் விருத்தியடைந்துள்ளதினை அவதானிக்கின்றார். "மக்கள் தகுதியற்ற ஏழைகளை" கண்டுபிடித்துள்ளனர். சமத்துவமின்மையின் உண்மைத்தன்மை அளவுகடந்து வளர்ந்துள்ளது அதனால் இது பெரியளவிலான வாசகர்களை தொட்டுள்ளது".

ஊடகம் வறுமை தொடர்பான பிரச்சனைகளை உள்ளடக்கும் நேரத்தின் போது அது பெரும்பாலும் ஒரேமாதிரியானதாக அல்லது மேலோட்டமானதாக இருக்கிறது. ஏழைகள் பாதிக்கப்பட்டவராகவும், ஒட்டுண்ணிகளாவும் அல்லது பிரச்சனைகளை உருவாக்குபவர்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளார்கள்.

சைமன் குபேர் சொல்கிறார்: "அவர்கள் பாதிக்கப்பட்டவர்களாக காட்டுவதனை விட, தொழிலாளர் வர்க்க பெண்களின் பத்திரிகைகளில் பயன்படுத்தப்பட்ட கஸ்டங்களை எதிர்த்து வெற்றி பெற்ற கதைகளை நகல் எடுக்க முடியும். இது மன்செஸ்டரில் உள்ள சமூக ஆய்வாளர் அமினா லோன் ஆல் முன்வைக்கப்படுகிறது. இது ரீடா வினை கற்பித்தலில் வேலைசெய்துள்ளது. இது ஒரு பல்பலைக்கழகம் செல்லும் சிகையலங்கார நிபுணர் லிவர்புட்லியனின் கதை."

# 4. வறுமையினை விளங்கிக்கொள்ளல்: ஒரு பறவைக் கண் பார்வை

வறுமை பல்வேறு பட்ட வழிகளில் அறியப்பட்டும், மதிப்பிடப்பட்டும் விளங்கிக்கொள்ளப்பட்டும் இருக்க முடியும். ஒரு வழியாக வறுமையைப் பற்றிய மேலோட்டப்பார்வை அல்லது பெரியளவான படம் புள்ளிவிபர தரவுகள் மற்றும் அவற்றின் பகுகபய்வுகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றது.

இந்தப்பகுதி வறுமை தொடர்பான கற்கைகளுக்கு அர்ப்பணிப்பு செய்த கற்கையின் பெரும் பகுதிக்குரிய ஒரு விரைவான மதிப்பீட்டினை வழங்குகின்றது.

## வறுமையினை எப்படி அளவிடுவது?

வறுமையினை விபரிப்பதற்கு ஒரு தனியான அணுகுமுறையில்லை, மற்றும் இதனை அளவிடுவதற்கு என்று தனியான குறியீடும் இல்லை. வறுமை ஒரு பல்பரிமாணத்துடனான ஒரு சிக்கலான தோற்றப்பாடு.

ஆய்வாளர்கள் வறுமையினை வரையறுப்பதற்கும், அளவிடுவதற்கும் மற்றும் கண்காணிப்பதற்கும் நான்கு பிரதான அணுகுமுறைகளை பயன்படுத்துகின்றனர். அவையாவன, நிதி அணுகுமுறை, திறன் அணுகுமுறை, சமூக விலக்கல் அணுகுமுறை, மற்றும் பங்குபற்றல் அணுகுமுறை என்பனவாகும்.

- நிதி அணுகுமுறையானது, வருமானம் மற்றும் செலவீனம் போன்ற இடர்பாடுகளின் பொருளாதார பரிமாணங்களில் கவனம் செலுத்துகின்றது. இது வறுமையின் அம்சத்தினை நன்கு தெரிந்திருக்கின்றது.
- திறன் அணுகுமுறையானது, இந்திய பொருளியலாளரினால் அறிமுகப்படுத்தப்பட்டது மற்றும் நோபல் பரிசு பெற்ற அமட்யா சென், நல்ல வாழ்க்கைக்கு கிடைக்க வேண்டியவற்றில் கவனம் செலுத்துகிறார். அவர் பெறுமதிப்படுத்துகிற வாழ்க்கை ஒரு தனிநபருக்கு இருக்கா? அவர் சுகாதாரம், கல்வி, சூழல் மற்றும் வலுவூட்டல் போன்றவற்றின் அடிப்படையில் திறன்களின் அடிப்படை மட்டத்தை அடைய முடியுமா? இல்லை என்றால், வாழ்கின்ற ஒரு வாழ்க்கையின் திறன்கள் மறுக்கப்பட்டிருப்பதாக வறுமை விளங்கிக்கொள்ளப்பட்டுள்ளது.
- சமூக விலகல் அணுகுமுறையானது, சில மக்கள் சமூகரீதியாக பாரபட்சமாக்கப்பட்டும் விலக்கப்பட்டும் இருப்பதாக அடையாளப்படுத்துகிறது. இதன் விளைவாக, அவர்கள் முழுமையாக கொள்கை உருவாக்கம், சிவில், சமூக மற்றும் கலாசார வாழ்வை தவறவிடுகிறார்கள்.
- பங்குபற்றல் அணுகுமுறையானது, மக்களின் கருத்தினை அடிப்படையாக கொண்டுள்ளது மற்றும் அதனால் இது அகவயத்தன்மையானதாக இருக்கிறது.

முழு வறுமையானது "உடலியல் நல்வாழ்வுக்கான சுயதேவைக்கு கீழான குறைந்த பட்ச தேவைகள்" என விபரிக்கப்பட்டுள்ளது. இது மிகக்குறைந்த தேவைகளினுடைய தொகுதியினை பெறுவதற்கன வசதிக்கான திறனால் அதிகமாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சார்பு வறுமை தேசிய சராசரியின் குறிப்பிட்ட பகுதிக்கு கீழ் இருக்கின்ற வருமான அல்லது நுகர்வு மட்டமாக எடுக்கப்பட்டிருக்கிறது.

வறுமை பற்றி ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள் இரண்டு தனித்துவமான வகைப்பாடுகளை அடையாளப்படுத்துகின்றனர்: வறுமையில் வாழும் மக்கள் (நீண்ட கால ஏழைகள்), மற்றும் வறுமையால் பாதிக்கப்படக் கூடியவர்கள் அல்லது வறுமையினுள் இலகுவாக விழக்கூடியவர்கள் (நிலையற்ற மற்றும் வறுமைக்கு அண்மையில் உள்ளோர்).

## வறுமைக்கோடு கோடு என்றால் என்ன?

> **இலங்கையின் உத்தியோகபுர்வமான வறுமைக்கோடு ஒரு மாதத்திற்கான தனி நபர் வருமானம் ஷரூபா 3,937 ஆக இருக்கிறது. வறுமையின் பொருளாதார பரிமாணங்களை (வரவு மற்றும் செலவு) மட்டும் உள்ளடக்குகிறது. மற்றும் சுகாதாரம், கல்வி, சமூக உறவுகள் மற்றும் சூழலியல் பிரச்சனைகள் போன்ற அம்சங்களிலிருந்து விலகுகிறது.**

வறுமைக்கோடு (மேலும் வறுமையின் வாசல் அல்லது வறுமையின் வரையறை என அறியப்படுகிறது) அலுவலக நோக்கத்துக்காக பொருளாதார வறுமையினை அளவிடும் ஒரு முயற்சியாக இருக்கிறது. இது குறிப்பிட்ட நாட்டில் ஒருவர் வாழ்வதற்கு போதுமான நிலையின் குறைந்த பட்சநிலையாக இருக்கிறது.

2016 ஜீலையில், இலங்கையின் வறுமைக்கோடு ஒரு மாதத்திற்கான தனி நபர் வருமானம் இலங்கை ரூபா 3,937 ஆக இருந்தது. எவ்வாறாயினும், இது வறுமையின் பொருளாதார பரிமாணங்களை (வரவு மற்றும் செலவு) மட்டும் உள்ளடக்குகிறது. மற்றும் சுகாதாரம், கல்வி, சமூக உறவுகள் மற்றும் சூழலியல் பிரச்சனைகள் போன்ற அம்சங்களிலிருந்து விலகுகிறது.

வறுமைக்கோட்டினை கணக்கிடுவதற்கு பயன்படும் பிரதான தரவு மூலமானது, மூன்று வருடத்திற்கு ஒரு தரம் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் வீட்டுத்துறை வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய ஆய்வாக இருக்கின்றது. இறுதி 2012/2013 இல் செய்யப்பட்டது

உண்மையான மாதாந்த தனிநபர் செலவீனம் உத்தியோகபூர்வ வறுமைக்கோட்டின் பெறுமானத்தை விட குறைவாக இருந்தால், அந்த நபர் வறுமையில் இருப்பதாக கருதப்படுவார். இம்முறையைப் பயன்படுத்துவது, 2012/13 இல் 6.7% - அல்லது 1.3 மில்லியன் மக்களாக இலங்கையின் வறுமை தலை குறியீடு இருந்ததாக திணைக்களம் கணிப்பிட்டது.

எவ்வாறாயினும், CEPA வின் பகுப்பாய்வானது நிதியில் அல்லது முழுமையான நடவடிக்கைகளில் வரையறுப்பது போதுமானதுமில்லை மற்றும் தவறான வழிக்கு கொண்டு செல்லக்கூடும்.

உதாரணமாக, வருமான வறுமையானது அண்மைய ஆண்டுகளில் தோட்டதுறையில் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியடைந்துள்ளதாக தரவுகள் காட்டுகின்றன. எவ்வாறாயினும், அனேகமான தோட்டத்தொழிலாளர்கள் இன்னும் கல்வி, நீர் மற்றும் சுகாதாரம், அளவான வீடு போன்றவற்றை பெற்றுக்கொள்வதில் குறிப்பிடத்தக்களவில் பின்னால் நிற்கின்றனர்.

வேறு சொல்லில் சொன்னால், அவர்கள் பின்தங்கியிருக்கின்றனர்.

2016 ஏப்பிரலில் CEPA விவாதித்த்து போல,"ஒரு நம்பிக்கையான மற்றும் சரியான வறுமை அளவீடானது, வறுமையினை தேவையான அனைத்து பரிமாணங்களயும் உள்ளடக்குகிறது. இது போன்ற ஒரு அளவீடு ஏழைகள், ஏழையாகப்போறவர்கள், ஏழையை சார்ந்தோர், சமுர்த்தி போன்ற வறுமைக்குறைப்பு திட்டங்கள், முதியோர் மற்றும் அங்கவீனர்கள் போன்ற பாதிக்கப்பட்ட குழுக்களுக்கான கொடுப்பனவுகள் போன்றவற்றுக்கான முன்நிபந்தனையாக இருக்கிறது. வறுமையின் ஏனைய அம்சங்களை நிராகரித்து நிதி அணுகுமுறை எனும் ஒரு பரிமாணத்தை அடிப்படையாகக் கொள்கின்றது. அதனாலேயே இடர்பாடுகளையும் விலக்கல்களையும் எதிர்நோக்குகின்ற மக்களை பாதிக்கின்ற பரந்தளவான பிரச்சனைகளை உள்ளடக்குவதில் தவறுகின்றது.˙.

[3] Poverty Indicators from HIES 2012/13: http://www.statistics.gov.lk/poverty/PovertyIndicators2012_13.pdf

### தரவு மூலங்கள்:

DCS website : http://www.statistics.gov.lk/page.asp?page=Poverty
World Bank South Asia: http://www.worldbank.org/en/region/sar
UNDP Human Developments for Sri Lanka: http://hdr.undp.org/en/countries/profiles/LKA

# 5. வறுமையினை விளங்கிக்கொள்ளல்: ஒரு கீழ் மட்டப் பார்வை

இன்றைய சமூகத்தில் பல காரணிகளைப் போல, வறுமையும் ஒரு சிக்கல்தன்மையானது. தேசிய மட்ட புள்ளிவிபரங்களின் ஒரு பறவைப் பார்வை பயனுள்ளது ஆனால் அதன் பல வேறுபாடுகளை விளங்கிக்கொள்ள போதுமானதில்லை.

சில வெளித்தோற்றத்தில் ஈர்க்கக்கூடிய தேசிய மட்ட புள்ளிவிபரங்கள், மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் காணப்படும் பிரதான வேற்றுமைகளை மறைக்க அல்லது வலுவிழக்கச் செய்ய முடியும். ஒரு கவனமான தரவுப் பகுப்பாய்வானது, இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் கடந்த இரண்டு தசாப்தங்களில் சமத்துவமான ஒரு முன்னேற்றம் இல்லை என்பதை காட்டுகிறது..

உதாரணமாக, பல மாவட்டங்கள் ஏற்கனவே இடைநடுவில் வருமான வறுமை விகிதங்களை விலக்கியிருந்த போது அங்கே பல விதிவிலக்குகளும் இருக்கின்றன. இது வடக்கு கிழக்கு மாவட்டங்களில் இருக்கின்ற எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்குகிறது. இதற்கு முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுவதற்கு நம்பிக்கையான தரவுகள் இல்லை. ஊவா மாகாணத்தில் மொனராகலை மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளில் உண்மையில் அதிகரித்திருக்கிறது.

அதேமாதிரி, பல மனித அபிவிருத்தி சுட்டிகள் தோட்டத்துறையில் குறைவாக இருக்கின்றன, அங்கே 4.4% இலங்கைச் சனத்தொகை வாழ்கின்றனர். ஒரு உதாரணம்: நகர மற்றும் கிராமப் பகுதிகளில் 90% வீதமான மக்கள் சுத்தமான குடிநீரை பெறும் பொழுது தோட்டத்துறை மக்களில் இந்த விகிதம் 46.3% ஆக உள்ளது.

சிலநேரத்தில் வறுமை அனேகமாக அல்லது முழுமையான ஒரு கிராமத் தோற்றப்பாடு. நகர வறுமையும் அதன் சொந்தமான இயங்கியலுடன் இருப்பதனால் இது பிழையானது. வறுமை பற்றிய கற்கைகளும், பதில்களும் வறுமை எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் தேவையான வடிவத்தில் செய்யப்பட வேண்டியது தேவையாகும்.

வறுமை பற்றி கற்றல் "கல்வியியல் அல்லது ஊடகவியல்" சிறந்த ஒரு விரைவில் குணமாகக் கூடிய "நொடிப்பை (ளுயெிளாழவ)" செய்யப்பட்டிருக்கவில்லை ஆனால் அக்காலப்பகுதியில் புகைப்படங்களின் தொடர்ச்சி போன்று எடுக்கப்பட்டிருக்கின்றன. இது ஏனெனில் மாறும் சூழ்நிலைகளின் பிரகாரம் குடும்பங்கள் வறுமைக்கு உள்ளேயும் வெளியேயும் நகர முடிகின்றன.

அண்மையில் ஒரு op-ed கட்டுரையில், CEPA விவாதித்துள்ளது :

"நம்பகமான தரவுகள் வறுமை மதிப்பீட்டின் மத்தியில் இருக்கின்ற அதேநேரத்தில், வறுமைக்கான அளவீடுகளும் தரவுப் பல்வகைமைக்குரிய மேலதிக நேரத்திற்காக அழைக்கின்றது. உதாரணமாக" நீண்டகால ஆய்வுகளில் ஒரே வீட்டுத்துறைகளுக்கு கடந்த பல வருடங்களில் மீண்டும் மீண்டும் சென்று மதிப்பிடப்படன. இது நாற்பட்ட மற்றும் நிலையற்ற வறுமையினை விளங்கிக்கொள்வதற்கு அவசியமனதாகும். உதாரணமாக,2005-2010 காலப்பகுதியில் வறுமையில் முழுமையான பிடிக்குள் இருந்தவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. அங்கே இன்னும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான மக்கள் வறுமைக்கோட்டின் மீது சுற்றுகிறார்கள் மேலும் அவர்கள், ஒன்றில் குடும்ப அல்லது சமூக மட்டத்தில் ஏற்படக்கூடிய வீட்டுத்துறைக்கு வருமானம் ஈட்டும் குடும்ப அங்கத்தவர் இறத்தல் அல்லது இயற்கையனர்த்தம் அல்லது அவசியமான பொருட்களின் விலை திடீரென அதிகரித்தல் போன்ற அதிர்ச்சியால் மீண்டும் வறுமைக்குள் விழக்கூடிய வகையில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்."[4]

ஏழைகளின் வேறுபட்ட வகைப்பாடுகளை கண்டறிவதந்கு அவசியமான நீண்ட கால கற்கைகள்:

- வறுமையின் உள்ளேயும் வெளியேயும் நகரும் ஏழைகள்
- முறையற்ற தொழிலாளர் துறையில் தொழில்புரியும் "கண்ணுக்கு தெரியாத ஏழைகள்"[4]
- பெண்தலைமைத்துவ குடும்பங்கள்
- முதியவர்கள் (60 வயதுக்கு மேற்பட்டவர்கள், சனத்தொகையில் 13% மற்றும் அதிகரிக்கின்றது)
- வீடு இல்லாதவர் மற்றும
- உத்தியோகபூர்வ வறுமை கணிப்பில் தவறவிடப்பட்ட பாதிக்கப்பட்ட குழு.

இலங்கையிடம் தற்போது வறுமை மற்றும் ஏழைகளின் பல்வேறுபட்ட பரிமாணங்களை கண்டறியவும் பகுப்பாய்வு செய்வதற்கும் போதுமான தரவு மூலங்கள் இல்லை. ஆகவே ஏழைகளின் இந்த வகைப்பாடுகள் குறைந்த வகையிலேயே வறுமை குறைப்பு திட்டங்களில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன.

[4] http://www.sundaytimes.lk/160403/business-times/who-are-the-poor-more-than-one-way-of-understanding-poverty-187999.html

## சிறந்த பிரயோகத்துக்கான உதாரணம்:
## இலங்கை: மூன்று நாடுகளின் ஒரு கதை

ஊடகவியளாலர்கள் புள்ளிவிபரங்களை பாவிக்க முடியும், ஆனால் அவர்கள் இலக்கங்களலும், நிபுணர்களின் விளக்கங்களினாலும் கவரப்படாமலிருப்பதில் கவனமாக இருக்க வேண்டும். நல்ல ஊடகம் சந்தேகத்துடனான விசாரணை மற்றும் புலனாய்வுகளில் ஈடுபடுகின்றது. ஈச்லென் வியாபார இதழினால் (ஏப்ரில்) அண்மையில் ஒரு பிரசுரிக்கப்பட்ட கதை ஒழு நல்ல உதாரணம்.

இதன் அடிப்படை முகவுரை: "உத்தியோகபுர்வமாக, சனத்தொகை மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தின் வறுமைக் கணிப்பீட்டின் படி 6.7% மான இலங்கையர்களே வறியவர்கள், எவ்வாறாயினும், வறுமை பற்றிய இவ்வரைவிலக்கணமானது நம்பமுடியாத வகையில் தவறாக வழிநடத்துவதாகவும் தொடர்பற்றதாகவும் இருக்கிறது ஏனெனில் ஒரு தனி நபர் மட்டும் ரூபா 3930 க்கு மேல் சம்பாதிக்க வேண்டும் அல்லது நான்கு பேர் கொண்ட குடும்பத்தில் ரூபா 15720 வருமானம் பெற்றால் வறுமை இல்லை என புள்ளிவிபரத் திணைக்களம் வரையறுக்கின்றது. தீவின் ஒரு ஏழ்மையான பகுதியில் நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளை ரூபா 15720 வழங்க முடியுமா என அவர்கள் சிந்திக்க மாட்டார்கள்."

வீட்டுத்துறைக்குரிய வருமான தரவுகளை முழுமையாக பெறக்கூடியதாக இருந்தால் நம்பகத்தன்மையான ஒரு தலைக்கான வறுமை விகிதத்தினை வரையறுப்பது கடினமானதல்ல என கட்டுரை விவாதிக்கின்றது. ஆனால் சரியான வரையறைகளை பயன்படுத்துவது நெருக்கடியானவை: "இலங்கை தற்போது ஒரு நடுத்தர- வருமானம் பெறும் நாடாகும் மேலும் உப-சகாரன், ஆபிரிக்கா வின் வறுமை அளவீடானது இங்கு பயனற்றது."

நடுத்தர வருமானம் பெறும் நாடுகளில் ஒரு நாளைக்கு US$2.50 க்கு (கொள்வனவு-அதிகரிக்க சம மதிப்பு அல்லது PPP) கீழ் வருமானம் பெற்று வழ்பவர்களையே வறியவர்கள் என வரையறுக்கின்றது. இந்த இரண்டு நடுத்தர வருமான வறுமைக்கோடானது,2012⁄.13 விலைகளில் ஒரு மாதத்திற்கு தனிநபர் பெறும் ரூபா 6058 மற்றும் ரூபா 6692 வருமானத்துடன் ஒத்திருக்கின்றது.

"நடுத்தர வருமானம் பெறும் நாட்டின் நுகர்வு நிலையினை பயன்படுத்தி வறுமையினை வரையறை செய்தால் இலங்கையில் 65 வீதமானவர்கள் வரைக்கும் வறிவர்களாக இருக்கிறார்கள்" என கட்டுரை விவாதிக்கின்றது.

இது ஒரு வெளிப்படுத்தல், ஆனால் சூழ்நிலை இருண்டதாக இல்லை. கட்டுரை குறிப்பிட்டது போல் "வன்முறை, துன்பங்கள் மற்றும் வறுமை எப்படியோ மக்களின் கனவுக்கான திறனை அணைத்திருக்கவில்லை. தென்னாசிய பகுதியில் இருக்கும் அதிகமான வறியவர்களை விட இவர்கள் எதிர்காலம் பற்றிய நல்ல எதிர்பார்ப்புக்களுடன் இருக்கிறார்கள்."

வருமான வறுமையின் அடிப்படையில், காரணங்களையும் தாக்கங்களையும் கொண்டுள்ளது. தீவில் இருக்கின்றவற்றை வைத்து இலங்கைக்கு ஏறத்தாழ மூன்று வேறுபட்ட எல்லைக்கோடுகளை வரைவதற்கு சாத்தியமாகும் என கட்டுரை கூறுகின்றது. இது அனைத்து இலங்கையரின் உயர் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு தேவைப்படும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் சவால்களை சாதாரண வாசகர்களும் விளங்கிக்கொள்வதற்கு இவ்விதழின் கதை எவ்வாறு உதவுகின்றது என்பதற்கு சிறந்த உதாரணமாக இருக்கிறது.

இணையத்தில் : http://echelon.lk/home/sri-lanka-a-tale-of-three-countries/

# 6. வறுமை தொடர்பான அறிக்கையிடல்: அபிவிருத்தி ஊடகவியலுக்கான சவால்கள்



ட்ரயிசி விட்டாச்சி

அபிவிருத்தி ஊடகவியல் என்னும் எண்ணக்கருவானது இது 1960களில் உருவானது. பின்னர் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னெடுப்புக்களை பரந்தளவில் முக்கியத்துவப்படுத்துவதற்கு உதவும் வகையில் ஊடகம் 1970களில் முக்கியத்துவப்படுத்தப்பட்டது.

பிற்காலத்தில் இச் செயன் முறையானது எதிர்மறையான அர்த்தத்தினை வெளிப்படுத்துவதாகக் காணப்பட்டது. சில ஊடக செயற்பாடுகளினால் அபிவிருத்தி என்ற பெயரில் அரசாங்கம் மேற்கொண்ட செயற்பாடுகள் அனைத்தையும் விமர்சனமில்லாத அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டது.

உதாரணமாக 1970 மற்றும் 1980களில் இலங்கை ஊடகங்கள் மகாவலி அபிவிருத்தித் திட்டம் தொடர்பான விமர்சனங்களையும் அது தொடர்பான கேள்விகளுக்காக மிகக் குறைவான இடமே வழங்கப்பட்டிருந்தது. இன்று அந் நிலைமாற்றம் பெற்று நன்மை மற்றும் எதிர்மறை விளைவுகள் தொடர்பான விடயங்களை முன்னிறுத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கையின் முக்கியமான ஊடகவியலாளரும் பதிப்பாசிரியருமான ட்ரயிசி விட்டாச்சி (1921 - 1993) அபிவிருத்தி ஊடகவியலினை முக்கியத்துவப்படுத்தியவராகக் காணப்படுகின்றார். அபிவிருத்தி ஊடகவியலை இவர் தலையங்கங்களுக்கு அப்பால் சென்று மக்கள் சார்ந்து விடயங்களை வெளிப்படுத்தலுக்கும் விளங்கிக் கொள்ளலுக்குமான செயன்முறை என்கின்றார். இந்தப் பதமானது பிற்காலத்தில் துரதிஸ்டவசமாக அரசாங்கத்தால் நாட்டில் நடைபெறும் நல்ல விடயங்களை மட்டும் பிரதிபலிப்பதாகவும் ஏனைய குறைபாடுகளை சுட்டிக் காட்டுவதனைத் தவிர்த்தாகவும் பின்னாளில் குறிப்பிட்டுள்ளார்.

நேபாள பதிப்பாசிரியரான குண்டா டிக்சிட், ஆசிய நாட்டு ஊடகவியலாளர்களில் விட்டாச்சியால் பயிற்சியளிக்கப்பட்டு அவரால் கவரப்பட்டவர் கருத்தில் அபிவிருத்தி ஊடகவியல் என்பது ஒட்டு மொத்த ஊடகத்துறையில் அகதி நிலையில் உள்ளதாக அதிக முக்கியத்துவம் வழங்கப்படாத நிலையை விளக்கியுள்ளார். மூன்றாம் மண்டல நாட்டு ஊடகவியலாளர்களாலும் பதிப்பாசிரியர்களாலும் அதிக முக்கியத்துவம் வழங்கப்படாத மற்றும் மூன்றாம் நிலையில் வைத்து முக்கியத்துவம் வழங்கப்படாமல் நோக்கப்படுகின்றது. ஐ.நா அறிக்கையிலும் அபிவிருத்தி தொடர்பான அறிக்கையினை வெளியிடும் போது சாதாரண விடயங்களை பொதுவான முறையிலே வெளியிடப்படுகின்றது. விமர்சனமற்ற பகுப்பாய்வுசார் அணுகு முறையில்லாமல் பல விடயங்கள் வெளியிடப்படுகின்றன.

ஆனால் அபிவிருத்தி ஊடகவியல் சாதாரண பொறுப்பற்ற ஊடகவியலைப் போல இருப்பதில்லை. உண்மையில் ஊடகவியலின் அடிப்படைத் தத்துவங்கள் வறுமையையும் அபிவிருத்தியையும் பற்றிய சாத்தியமான விடயங்களை பிரயோகிக்க வேண்டும். இவ்வாறான வறுமை மற்றும் அபிவிருத்தி சார்ந்த விடயங்களை ஊடகவியலாளர்கள் பிரசுரிக்கும் போது அது தொடர்பான கவனம், சிந்தனையாக்கம் சார்ந்த விடயம் தொடர்பாக அறிவதற்கான ஆவல் அதிகரிக்கும்.

விட்டாச்சி எப்பொழுதும் ஊடகவியலாளரை ஞாபகப்படுத்துகின்றார். செய்திக்குப் பின்னாலிலும் செய்தி இதன் முக்கியத்துவம் செய்தியின் நன்மையினை நோக்குகின்றது. டிக்சிட் இதனை விவசாயிகள் தற்கொலை என்னும் பிரபலமான உதாரணத்தினைப் பயன்படுத்தி விளக்கமளித்துள்ளார்.

இந்தியாவில் விவசாயிகளின் தற்கொலை என்பது செய்தி தலையங்கங்களில் முக்கியத்துவம் பெறுகின்ற விடயமாக உள்ளது. 2014இல் 5650 விவசாயிகளின் தற்கொலை இந்தியாவில் இடம்பெற்றுள்ளது. மொத்தமாக 18241 விவசாயிகள் தங்களின் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர். இது தொடர்பாக ஆய்வாளர்களும், செயற்பாட்டாளர்களும் பல்வேறு விதமான காரணங்களை முன்வைக்கின்றனர். பருவப்பெயர்ச்சி மாற்றம் அடைந்துள்ளமை, அதிகளவான கடன் சுமை, பொருத்தமற்ற அரசியல் கொள்கைகள், மனநலம் சார் சுகாதாரம் மற்றும் குடும்பப் பிரச்சினைகள் என்பன வெளிக்காட்டப்பட்டுள்ளது.

உலகின் திகதி தொடர்பான அவரது புத்தகத்தில்: ஊடகவியல் பிரபஞ்சம் போல் என்றால் (Date line Earth) (ஐ.பி.எஸ். ஆசியா பசுபிக் 2010) டிக்சிட் குறிப்பிடும் பொழுது "ஆயிரக்கணக்கான பருத்தி விவசாயிகள் தற்கொலைக்குக் காரணமாக பருத்தியின் விலை வீழ்ச்சியும், அதிகளவான கடன் சுமையுமே என்கின்றார். ஆனால் இதனை ஒவ்வொரு ஊடகவியலாளரும் குறித்த தற்கொலை சிந்தனையாகவே நோக்கினாரே தவிர இந்த விடயத்தின் உண்மை நிலை சம்பந்தமாக ஆராய முற்படவில்லை. இதன் மூலம் ஊடகவியலாளர்கள் எவ்வளவு ஆழமாக விடயத்தினை நோக்கியுள்ளனர்? செய்திப் பிரிவுகளை உருவாக்கியவர்கள் யார்? அந்த செய்தி பிரிவுகளுக்கான வரையறை விதிகள் என்ன? சமூகத்தில் உள்ள பலமுள்ள பணக்காரர்களுக்கான சமூக நீதியின் அளவு மாற்றம் பெறுகின்றதா? இதில் தகுதி நிலையின் செல்வாக்கு மேலும் ஏழைகளுக்கு எதிரான பக்கச்சார்பு நிலை, ஒரு விடயத்தினை செயற்படுத்துவதில் நிடுநிலையாகவோ, அல்லது ஒரு சமூகத்திற்கு பக்கச் சார்பாகவோ காணப்படுதல். எனவே விடயம் என்பதில் பொதுவான தன்மையுடன் காணப்படுதல் வேண்டும்.

எனவே டிக்சிட் கருத்தில் ஊடகக்கொள்கை அதன் கட்டமைப்பு, அணுகுமுறை மாற வேண்டும், ஊடகவியலாளர்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமூக நீதியினை பெற உதவ வேண்டும். அதன் விளைவுகளை தேடுவது அல்ல. சமூக நீதியில் கிடைப்பிற்கான உண்மைக் காரணங்களை மனச்சாட்சி அடிப்படையில் பொதுவான விடயங்களை அடைந்து கொள்வதற்கு பங்காற்ற வேண்டும்.

# விடயக்கற்கை 1:
# வறுமை மற்றும் மதுபானம்:
# ஊடகத்தில் அச்சுக்கு எப்படி விபரிப்பது?

2016 மே 31 ம் திகதி, உலக புகைத்தல் எதிர்ப்பு தினம் அடையாளப்படுத்தும் நிகழ்வொன்றின் பேச்சில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புகைத்தல் பாவனை மற்றும் வறுமை மட்டத்தினை அதிகரிப்பிற்கான மதுபாவனை மற்றும் ஏழைகள் மத்தியில் சுகாதாரத்தின் பாதிப்பு தொடர்பாக ஏசியிருந்தார்.

செய்தி அறிக்கைகளின் படி, இலங்கையில் புகைத்தலுக்காகவும் மதுபானத்துக்காகவும் ஒரு நாளைக்கு ரூபா 500 மில்லியனுக்கும் மேல் செலவு செய்யப்படுவதாக சொல்லியிருந்தார். மேலும் இதற்காக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் தாங்கள் சம்பாதிக்கும் பணத்தில் 35□ ஐ செலவுசெய்கின்றனர். இதற்காக அரசாங்கம் புகையிலை மற்றும் மதுபான தொழிற்சாலைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தெளிவான முடிவினை எடுத்து அதனைப்பயன்படுத்தும்.

குறைந்த வருமானம் பெறும் குழுக்களுக்கு மத்தியில் மதுபாவனைக்கும், வறுமை மற்றும் நல்வாழ்வுக்குமான தொடர்பு பற்றி நீண்ட ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. மதுபாவனையால் சுகாதாரப்பாதிப்புக்கள் அதிகரித்திருக்கின்ற பொழுது வறுமையுடனான தொடர்புகள் அதிக சிக்கல் தன்மையானதாக இருக்கின்றன. மதுபாவனை மீது அதிக செலவீனத்தினை செய்யும் போது ஏழையாகவே இருப்பார்களா அல்லது தமது வேலைப்பழுவிலிருந்து தப்பிக்கும் நோக்கில் அதிகமான மதுபாவனை கொள்வனவு செய்வார்களா?

இந்த தலைப்பினை பிரசுரிக்கும் போது ஊடகவியலாளர்கள் மிகக்கவனமாக இருக்க வேண்டியிருக்கிறது - இது பொருளாதார, பொது மற்றும் ஒழுக்க பரிமானங்களை உள்ளடக்கியுள்ளது. ஊடகவியலாளர்கள் வெறுமனே மதுபாவனைக்கு எதிரான ஒழுக்கம் சார்ந்த அவர்களது சொந்த கருத்துக்களை கொண்டுவரக்கூடாது (கருத்துக்களை கட்டுரையாக எழுதும் வரை), மற்றும் உண்மைகள், எண்ணிக்கை மற்றும் நிபுணத்துவமான கருத்துக்களுக்குள் வரையறுப்பதற்குப் பதிலாக இப்பிரச்சனைகளுடன் தொடர்பான அம்சங்களில் மருத்துவ மற்றும் சமூக விஞ்ஞானிகளால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஆய்வுகள் இருக்கின்றன.

2010 இல் ஒரு கட்டுரை குறிப்பிட்டது,“மதுபானம் மற்றும் புகைத்தலுக்காக அதிக வருமானம் பெறுபவர்களை விட ஏழைகள் குறைவாகவே செலவிடுகின்றனர். ஆனால் அவர்களது வருமானத்துடன் பார்க்கும் போது அடிப்படை தேவைகளுக்கு செலவு செய்வதை விட அதிகமாக செலவு செய்கின்றனர். குறைந்த வருமானம் பெறும் நாடுகளில், பொருளாதார சூழ்நிலைகளின் சேதங்கள், மதுபாவனை மற்றும் புகைத்தலுக்கான கொள்வனவின் குறைந்த மட்டத்திலிருந்து ஆரம்பிக்கின்றது. மற்றும் இது சனத்தொகையின் விகிதத்தில் குறிப்பிடத்தக்க வகையில் பாதிக்கின்றது. ஆபத்து மட்டங்கள் மற்றும் வழிகாட்டல்களை வரையறை செய்யும் பாதுகாப்பு வரையறைகள், முழுமையாக தனிப்பட்டரீதியில், இருக்கிற சுகாதார தீங்கில் அடித்தளமிட்டுள்ளது. இது போன்ற அமைப்புக்களை குறைந்தளவு கருத்தில் கொள்வது நல்லது.” (மூலம்:goo.gl/Gt4p5o)

2016 ஜீனில், ஆய்வாளர் கிரு'ாண் ஜே சிறிவர்த்தன இந்த தலைப்பு தொடர்பில் ஒரு முகப்புத்தக கலந்துரையாடலை ஆரம்பித்தார். இது ஒரு கருத்துக் கட்டுரையாக ராவாஜா வில் திரும்பியது. இரண்டு புள்ளிகள் உருவானது: இயல்பாக குடிப்பது பிரச்சனை இல்லை ஆனால் அதற்கு அதிகம் செலவழிப்பதுதான் பிரச்சனன் மற்றும் இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புபடும் போது இது சாதாரண விடயமா அல்லது சிறியதாக தொடர்புபடுத்தும் கோடோ இல்லை. மேலும் இவர்,முன்னனி சமூகவியலாளரான கலாநிதி காலிங்க ரியுடர் சில்வா இலங்கையின் மத்திய மாகாணத்தில் வறிய தோட்டத்தொழிலாளர்கள் எவ்வாறு அவர்களுடைய குறைந்த வருமானத்தில் அதிக விகிதத்தை மதுபானம், புகைத்தல் மற்றும் வெற்றிலைக்கு செலவழிக்கின்றனர் என்பதை காட்டியிருந்தமையையும் மற்றும் சில வறியவர்கள் மத்தியில் மதுபானத்தில் தற்காலிக நிவாரணத்தினை காண்பது சாதாரணமாக புறக்கணிக்கின்ற விடயம் இல்லை மற்றும் கலாநிதி காலிங்க ரியுடர் சில்வா இவர்களின் கூற்றுப்படி இது தொடர்பான மேலதிக கற்கைகள் தேவை எனவும் சுட்டிக்காட்டிருந்தார்.

வறுமை-மதுபானம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு மீதான ஒரு ஊடகவியலின் விசாரணை அதிக சமநிலையாக இருக்க வேண்டும். இது சட்டரீதியாக மற்றம் சட்டவிரோதமாக, சுகாதாரம் மற்றும் சமூகவியல் தாக்கங்கள் ரீதியாக பார்க்கப்பட்டால் வறியவர்களில் மதுபானத்திற்கு அடிமையான சிலர் தொடர்பான.

# 7. வறுமையினை அறிக்கைப்படுத்தல் : சவால்கள் மற்றும் அணுகுமுறைகள

வறுமை ஒரு சிக்கலான தோற்றப்பாடாக தரப்பட்டுள்ளது, இதனை சரியாக அறிக்கைப்படுத்த விரும்பும் ஊடகவியலாளர்கள் ஆழமான மற்றும் அனுதாபத்துடனான பல சவால்களை எதிர்நோக்குகிறார்கள்.

உடனே, பல பதிப்பாசிரியர்களின் அக்கறையின்மை மற்றும் அலட்சியம் போன்ற உள்ளே இருக்கும் சவால்கள் முறியடிக்கப்பட வேண்டும். பகுதி 2 மற்றும் 3 இல் விளங்கப்படுத்தியது போல், அவர்கள் வறுமை முடிவில்லாத வருத்தத்தை கொடுக்கும் ஒன்றைப்போல் கருத்தில் கொள்கின்றனர். பதிப்பாசிரியர்களுக்கு புதிய மற்றும் ஆர்வமான கோணத்தில் இதனை எடுத்துச்செல்வது ஊடகவியலாளர்களைப் பொறுத்தது. அடிப்படையில் ஒரு கதையின் கருத்து பதிய உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்கள், உயர்கல்வி சார் ஆய்வுகள் அல்லது தொண்டு அடிப்படையில் கள மட்ட வேலை போன்ற கருத்துக்களை கொண்டிருக்க வேண்டும். அல்லது அது ஒரு புத்தாக்கம், கடின உழைப்பு மற்றும் நிலைபேறு மூலம் வறுமை தொடர்பாக வேலை செய்த தனிநபரின் பலமாக கதையாக இருக்க முடியும்.

உள்ளே இருந்த தடைகள் நீக்கப்பட்டவுடனே, வறுமையுடன் தொடர்பாக வேலை செய்யும் ஒரு ஊடகவியலாளர் பல வேறு சவால்கள் தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டும். சிலது பொருத்தமான பரிந்துரைக்கப்பட்ட அணுகுமுறைகளுடன் கீழே தரப்பட்டுள்ளது.

- **உத்தியோகபூர்வமான தரவுகள் பற்றிய அவதானம்:** அரசாங்கத்தின் அலுவலக வறுமை மதிப்பீடுகள் மற்றும் கொள்கைகள் வறுமையின் அனைத்து முகங்களையும் உள்ளடக்கவில்லை. அரசியல்வாதிகள் வேகமானதும் பரந்து பட்டதுமான வறுமைக் குறைப்புக்களை காட்டுவதற்கு பதட்டமடைகிறார்கள். சிலநேரம், அரசியல் அழுத்தத்தின் கீழ், அரசாங்க புள்ளிவிபரவியலாளர்கள் வரைவிலக்கணத்தினை மாற்றுகின்றனர் - இது வரலாற்று ஒப்பீட்டினை கடிமானதாகவும் கருத்தற்றதாகவும் உருவாக்குகிறது. அதனால், முழு உருவப்படத்துக்காக, ஊடகவியலாளர்கள் அரசாங்கம், உயர் கல்வி, மற்றும் இலாப நோக்கமற்ற துறைகள் (எவ்வாறாயினும், ஒரு ஆதாரத்தினை மட்டும் மையமாகக் கொண்ட கதைகள் ஒருபோதும் ஆதாரபூர்வமானதாக இருக்காது) பல வளங்களை சென்றடைய வேண்டியிருக்கிறது,
- **உயர்கல்வி மற்றும் தொண்டு தரவுகள் தொடர்பான கேள்வி:** நல்ல ஊடகவியலாளர்கள் ஒவ்வொன்றைப்பற்றியும் கேள்வி எழுப்ப வேண்டும்- பார்வையில் தன்னார்வலர்கள் அல்லது உயர் கல்வியலாளர்களிடமிருந்து தகவல்கள் வந்தாலும். பல தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கீழ் மட்டத்தில் இருக்கும் நுண்ணிலை பற்றி நன்கு அறிந்துள்ளன ஆனால் பெரிய அளவில் (தேசிய மட்டத்தில்) குறைவாகவே தெரிந்து வைத்துள்ளனர். சில கல்விசார் ஆய்வுகள் சிறிய மாதிரி அளவு அல்லது வேறு முறைமையியல் வரையறைகள் தொடர்பான சில விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்டும் இருக்கலாம்.
- **"தரவுகளைக் கையாள்தல்" உக்கும் அப்பால் பார்க்கவும்:** ஊடகவியலாளர்களுக்கும் தேவை ஆதாரம், மற்றும் இரகசியத்தன்மையான விடயங்கள் உள்வாங்கப்படும் போது அறத்தின் படி அவற்றின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டும். அதேநேரம், ஊடகவியலாளர்கள் அத்தரவுகள் திரிபடையாமல் இருப்பதிலுமு எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது. சில அரச அலுவலகர்கள், ஆய்வாளர்கள் அல்லது தன்னார்வலர்கள் அவர்களுக்கென தனியாக நிகழ்ச்சித்திட்டம் இருக்கலாம் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட தகவல்களையும் வியாக்கியானங்களையும் வழங்க முடியும். சந்தேகத்துடனான ஊடகவியலாளர்கள் அவர்களது சொந்த நம்பிக்கைள் அல்லது நட்புரீதியான

வளங்கள் ஒவ்வொற்றையும் கேள்விகேற்கின்றனர்.

- **ஞாபகம் வைக்கவும் "மக்கள் இலக்கங்கள் இல்லை" :** புள்ளிவிபரங்கள் எமது விளங்கிக்கொள்ளலுக்கு உதவும் பொழுது, நாங்கள் ஏதாவது சிக்கல்களுக்கான கண்டுபிடிப்புக்களை எண்களுடன் மட்டும் மட்டுப்படுத்துவதில்லை. இதற்கு பின்னால் ஒவ்வொரு சமூக அல்லது வறுமை தொடர்பான புள்ளிவிபரம், ஆண், பெண் , கண்ணியமான வாழ்வை பாதுகாக்க போராடும் சிறுவர்கள் போன்றோரின் உண்மையாக இருக்கிறது. இலக்கத்தால் அறிவிக்கப்பட்டது மனித ஆர்வத்தை பார்க்கிறது. குறிப்பிட்ட நபர்களுடன் அல்லது குடும்பங்களுடன் பேசுவதன் மூலம் தனிப்பயனாக்க முயற்சிக்கவும்.

- **ஒரேமாதிரியான விடயத்தை புறக்கணிக்கவும் :** இது ஒவ்வொருவருக்கும் ஒரு நல்ல அறிவுரை, ஆனால் விசேடமாக ஊடகவியலாளருக்கு. இந்த தலைப்பில் சமூகத்திற்கு வறியவர் தொடர்பாக வேறுபட்ட அனுமனங்கள் உண்டு - சோம்பறியாக இருத்தல், நம்பிக்கையில்லாதவா் மற்றும் திரிபுபடுத்துபவர். இந்த மனித இயல்புகளை உடையவர்கள் அனைத்து சமூக-பொருளாதார மட்டங்களில் இருப்பவர் மத்தியிலும் கண்டறியப்பட்டுள்ளது - இவை ஏழைகளிடையே மட்டும் இல்லை . அகவே ஊடகவியலாளர்கள் திறந்த மனதுடனும் நடுநலையான மனதுடனும் கதைகளை அணுகும் போது மிக்க கவனமாக இருக்க வேண்டியிருக்கிறது. கதைகள் குறிப்பிட்ட தனிநபர்.்.கள், சமூகங்கள் மற்றும் இடங்களை மையமாக கொண்டிருக்க வேண்டும். தார்மீக ஒழுக்கங்களை விட்டு வெளியே இருக்கவும்.

- **பால்நிலை கண்ணோட்டங்களை கவனித்தல் :** சமூகத்தில் இருக்கும் சமத்துவமற்ற அதிகார உறவினால் வறுமை ஏற்படுகின்றது. பெண்கள் பொருத்தமற்ற விகிதாசாரத்தில் பாதிக்கப்படுகிறார்கள் அது சமூக மற்றும் அரசியல் நிலைமைகளில் மேசமான நிலையினை உருவாக்கியிருக்கினறன. ஊடகத்தில் வறுமை மற்றும் அபிவிருத்தி பற்றி உள்ளடக்கும் போது ஊடகவியலாளர்கள் பால்நிலை தொடர்பான வேறுபாடுகள், பற்றி விழிப்பாகவும் உணர்வுரீதியானதாகவும் இருக்க வேண்டியுள்ளது. இதன்கருத்து பெண்கள் தொடர்பாக கதைகளில் அதிகம் கவனம் செலுத்தப்படுகிறது. பால்நிலை தொடர்பான வேறுபாடுகளுக்கு சிந்தனை சார்ந்த பகுப்பாய்வு தேவையாகிறது. கீழே உள்ள பெட்டியைப்பார்க்கவும்.

- **சமூக மற்றும் கலாசார காரணிகளை கவனத்தில் கொள்ளல் :** இக்கையேட்டில் விளக்கியிருப்பதை போல்,வறுமை குறைவான பணத்தினை விடவும் மேலானது. சமூக கலாசார காரணிகளும் மக்களை வறுமையில் வைத்திருப்பதற்கு பங்களிப்பு செய்கிறது. சாதி மற்றும் சில பிள்ளைகளுக்காக தொடரும் உயர் கல்வி, பயிற்சிகள் மற்றும் தொழில்கள் போன்ற கலாசார பழக்கங்கள் என்பவற்றிலிருந்து உறுதியான சமூக படிநிலைகளுக்கு வேஷரூன்றியிருக்கு முடியும். அவர்கள் வறுமை மற்றும் கீழான அபிவிருத்தியின் குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு பங்களிப்பு செய்வதாக பொறுப்புத்துறக்க வேண்டியிருக்கிறது.

- **பொருட்கள் மாற்றம் :** இலங்கையின் நிலைமாற்றத்தில் ஒரு போருக்கு பின்னரான சமூகமாக இருக்கிறது. அதிகமான மாற்றங்கள், சிலநேரம் வேகமானது, ஊடகவியலாளர்கள் இறுதி நிலையினை பகுப்பாய்வு செய்து அறிக்கைப்படுத்த எதிர்பார்க்கின்றனர். இதற்காக, அவர்கள் இறுதி தரவுகளையும் சிறந்த தகவல் நிபுணர்களையும் பயன்படுத்த வேண்டும். ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட எல்லா தரவுகளையும் நிராகரிக்க வேண்டும் (10 வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் வசனத்தொகை மதிப்பீடு தவிர). பழைய முன்னைய களப்பயணங்கள் அல்லது நேர்காணல்கள், மூலம் பெற்றுக்கொண்ட பதிவுகள் மாற்றத்திற்கான தற்போதைய உண்மைத்தன்மையில் பயன்படுத்தும் போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

## பால்நிலை மற்றும் வறுமைக் குறைப்பு

உலகின் ஏழைகள் பலர் பெண்களாக இருக்கின்றனர். இவர்கள் ஆரம்ப குடும்ப கவனிப்பாளர்கள் மற்றும் உணவு உற்பத்தியாளர்களாகவும், நிலத்தின் சுமை, தானியங்களை அரைத்தல் நீர் சுமத்தல் மற்றும் சமைத்தல் போன்றவற்றை சுமப்பவர்களாகவும் இருக்கின்றனர்.

ஆண் பெண்களுக்கிடையிலான சமத்துவமானது சமூக நீதியை விட மேலானது " இது அடிப்படை மனித உரிமை ஆகும். ஆனால் பால்நிலை சமத்துவமும் நல்ல பொருளாதார அறிவை உருவாக்குகிறது. பெண்கள் கல்வியினை பெறுவதிலும், வியாபாரம் மற்றும் தீர்மானம் எடுத்தலில் முழுமையான பங்குபற்றுக்கு போவதற்குமான சமத்துவம் இருக்கும் போது, அவாகள் வறுமைக்கு எதிரான நகர்த்துவதில் பிரதானமானவர்களாக இருப்பார்கள். பெண்களுக்கான சமத்துவ உரிமைகளாவன நல்ல கல்வி, ஆரோக்கியம் மற்றும் நிலத்தினை பயன்படுத்தக்கூடியதாக இருத்தல், தொழில் மற்றும் நிதி வளங்கள் என்பனவாகும். அவர்களுடைய சம்பாதிக்கும் பலம் அதிகரித்தலானது குடும்ப வருமானத்தினை உயர்த்துகிறது. வீட்டுத்துறையில் தீர்மானம் எடுத்தல் மீது பெண்களின் கட்டுப்பாட்டினை அதிகரிப்பதால், பால்நிலை சமத்துவமும், நல்ல வாய்ப்புக்கள் மற்றும் குழந்தைகளின் சிறந்த நல்வாழ்வு, எதிர்கால சந்ததியின் வறுமையினை குறைத்தல் போன்றவற்றுக்குள் மொழிபெயர்க்கப்படுகிறது

பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்களின் வலுவூட்டல், மில்லேனியம் அபிவிருத்திக்கான இலக்கினை (MDGs) அடைவதற்கான மத்தியாகும். பால்நிலை சமத்துவத்தில் நேர்மறையான போக்குகள் இருகின்ற போதிலும் இன்னும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பகுதிகள் பல இருக்கின்றன. பெண்களுடைய எண்ணிக்கையில் பிள்ளைகளில் பெரும்பான்மையானோர் பாடசாலைக்கு செல்வதில்லை அபிவிருத்தியடைந்து வரும் நாட்டில் மூன்றில் இரண்டு பங்கினர் முறைசாரா துறைகளில் வேலை செய்கின்றனர் அல்லது வீட்டில் ஊதியம் இல்லாத வேலையாட்கள். இருந்தபோதிலும், சிறந்த பாராளுமன்ற பங்குபற்றலானது, உலகம் முழுவதும் சட்டமன்றங்களில் பெண்கள் நாலில் ஒழு பகுதியினரே இருக்கின்றனர்.

***UNDP*** "யின் "பால்நிலை மற்றும் வறுமை குறைப்பிற்கான அறிமுகம்"
இலிருந்துபிரித்தெடுக்கப்பட்டது
http://www.undp.org/content/undp/en/home/ourwork/povertyreduction/focus_areas/focus_gender_and_poverty.html

## விடயக்கற்கை 2:
## இலங்கை எப்படி நகரமயமாக்கப்பட்டிருக்கிறது?

நகரமயமாக்கலின் நிலையானது ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்க்கைத்தரம் என்பவற்றின் ஒரு குறிகாட்டியாகும். ஆகவே இலங்கை எவ்வாறு நகரமயமாக்கப்பட்டிருக்கிறது? "நாங்கள் கிராமப்புறத்தவர்களாக இருக்கிறோம்" எனும் ஒரு கருத்தை பல தடவை மீண்டும் வைக்கிறது, ஆனால் இனி அது உண்மையான விடயமா?

18.2% மான இலங்கையர்கள் மட்டும் நகர்ப்பகுதியில் இருப்பதாக 2012 சனத்தொகை மற்றும் வீட்டுப் புள்ளிவிபரம் வகைப்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், இந்த தரவு தவறானதாகும். ஏனெனில் ஒரு குறுகிய வரைவிலக்கணம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. தற்போது மாநகர சபைப்பிரதேசம் மற்றும் நகர சபைப்பிரதேசம் என்பவற்றில் வாழ்பவர்கள் மாத்திரம் நகரத்தில் வாழ்வதாக கவனத்தில் கொள்ளப்படுகின்றனர். உண்மையில், சில பிரதேச சபைப்பிரதேசங்களும் நகரமயமாக்கப்பட்டுள்ளன.

2015 நவம்பரில், கொழும்பில் நடைபெற்ற மாநாட்டில் பேசும் போது, பெருநகரம் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க இலங்கையின் நகர சனத்தொகை பகிர்வு அனேகமாக 48 வீதத்தை விட அதிகம்"என வாதிட்டார். அது தற்போது இருக்கும் விகிதாசாரத்தை விட இரண்டரை மடங்கு அதிகமாகும்.

அவர் பிரதேச சபைகளுக்கான உதாரணமாக ஹோமாகம, பேருவளை மற்றும் வெலிகம போன்ற பகுதிகளைக் குறிப்பிட்டார். அவை பல நகரத்துக்கான பண்புகளைக் கொண்டிருந்தாலும் நிருவாகரீதியாக அவை "கிராமம்" என வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவரது பிரதான அக்கறை: இது போன்ற பிழையான கருத்துக்கள் நாட்டின் கட்டமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி மீதான கொள்கைத் தீர்மானங்களை சிதைக்கின்றது.

உலக வங்கியின் நகர அபிவிருத்தி அணுகுமுறைகளுக்கான உலக முன்னனி , சுமிலா குள்யானி, அண்ணளவாக இலங்கை சனத்தொகையில் அரைவாசியினர் ஏற்கனவே நகரவாசிகளாக வந்திருப்பதனை ஏற்பதாக கூறியுள்ளார். வங்கியும் ஏறத்தாழ சமம் என மதிப்பிடுவதாக அவர் கூறினார். "இலங்கையில் நகர சனத்தொகையின் உத்தியோகபூர்வ புள்ளிவிபரம் 14% - 18% ஆக இருக்கிறது.- ஆனால் நீங்கள் அதனை திரட்சியாக பார்த்தால் அது கிட்டத்தட்ட 47□ ஆகும்"

"எல்லா தென்னாசிய நாடுகளும் அரசாங்கத்தின் கீழ் தமது நகரமயமாதல் நிலை இலற்றீன அமெரிக்காவுடன் தொடர்புபடுவதாக சொல்கிறார்கள். இந்தியாவிலும் இது ஒரே மாதிரியான கதைதான். பாரம்பரியமாக கிராமப்பகுதிகள் அரசாங்கத்தின் மானியத்திட்டங்களைப் பெறுவதே காரணமாகவிருக்கிறது. "மேலும் நிருவாகம் அவைகளை நகரம் என அழைக்கவும் விரும்பவில்லை!" எனவும் அவர் கூறினார்..

தென்னாசியாவை முழுமையாக எடுத்தால், இப்போது இணைந்த மக்களின் 30% மானவர்கள் நகரத்தில் வாழ்கின்றனர். இந்த நகர்ப்புற பங்குகளின் பெரும் எழுச்சி வரும் பத்தாண்டுகளில் எதிர்பார்க்கப்பட்டது. இலங்கை இந்த போக்கிலிருந்து விலகமுடியாது.

இது இருந்த போதிலும், ஆண்டுகளாக தொன்மங்களும் ஒலிக்கின்றன. இப்பிரச்சனை திறன்களின் பொருத்தமில்லாத தன்மையில் இருப்பதாக குள்யானி முதன்மைப்படுத்தினார். "ஒரு நகர்ப்பகுதியை முகாமை செய்யும் சபை (உள்ளூராய்ச்சி) கிராமிய சபை என்றால் திட்டமிடலின் வகைப்பாடுகளையும் நகர முகாமைத்துவத்தையும் நீங்கள் பார்க்கப்போவதில்லை. நீங்கள் நகர வளர்ச்சிக்கான உருவாக்கங்களை காண வேண்டும்."

இதன்போது, புதிய உலக வங்கி அறிக்கையில் *"தென்னாசியாவில் உணரக்கூடிய நகரமயமாக்கம் : செழிப்பு மற்றும் உயிர்த்திறனுடனான இடம் சார்ந்த நிலைமாற்றத்தினை முகாமைசெய்தல்."* (2015 செப்ரெம்பர்) எனும் தலைப்பு, சனத்தொகையின் இலங்கையின் பங்கில் நகரத்தில் வாழ்பவரின் தொகை 2000 மற்றும் 2010 காலப்பகுதியில் உண்மையில் சிறிதளவு குறைந்துள்ளது என உத்தியோகபூர்வமாக வகைப்படுத்தியிருக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளது.

"எவ்வாறாயினும், இந்த உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்கள், "மறைந்த" நகரமயமாக்கலை கணிசமாக தவறவிடுவதாக அறிக்கை கூறுகிறது.இலங்கையின் சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு உத்தியோகபூர்வமாக நகரம் "உறுதியான நகர அம்சங்களை வைத்திருப்பினும்" என வகைப்படுத்தாத பகுதிகளில் வாழலாம் என அது பரிந்துரைக்கின்றது. இந்த அறிக்கை வழக்கத்திற்கு மாறான தரவுத்தளங்களை - இரவுநேர விளக்குகள் மற்றும் வெவ்வேறு வடிவிலான தொலைதூர இயக்கிகள் மூலம் உலகத்தை கண்காணித்த தரவுகள்- கோடிட்டுக்காட்டுவதன் மூலம் எங்களது பிராந்திய தரவுத்தளங்களின் குறைபாடுகளை கடக்க முயற்சிக்கின்றது.

முழுமையான வாசிப்பிற்கு:
http://www.dailymirror.lk/94975/let-s-get-real-about-sri-lanka-s-urbanization

## விடயக்கற்கை 3:
## மலசலகூடங்கள் அல்லது தொலைபேசிகள்? அது பிழையான கேள்வி!

உலகரீதியாக,2.5 மில்லியன் மக்கள் சுத்தமானதும் தனியானதுமான மலசலகூடம் இல்லாமல்இருக்கின்றனர். உலக மலசலகூட தினம் ( நவம்பர் 19) இந்த விடயத்திற்கும் யார் கழிப்பிட வசதிகள் அடிப்படை மனித உரிமைகள் என வாதாடுவோருக்கும் ஒரு சம்பியன் ஆக இருக்கின்றது.

ஆனால் சில நேரம் ஒற்றைப் பிரச்சனைக்கான செயற்பாட்டாளர்கள் இதனை வெளியே எடுத்துச் செல்கின்றனர். ஒரு விடயம் புள்ளியில் பொதுவான தலைப்பாக இருக்கிறது.: அதிகமான மக்கள் மலசலகூட வசதிகளை விட தொலைபேசி வைத்திருக்கிறார்கள்.

இந்தியாவில் அடிக்கடி சொல்லப்படுகிற உதாரணம்,2011 இல் இந்தியாவில் செய்யப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பு 63.2 வீதமான மக்கள் தொலைபேசி இணைப்புக்களை வைத்திருக்கிறனர் ஆனால் 53.1 வீதமான மக்கள் எந்தவிதமான மலசலகூட வசதிகளையும் கொண்டிருக்கவில்லை. இந்த சூழ்நிலை கிராமப்புறத்தில் மிகவும் மோசமாக இருந்தது. இங்கே 67.3 வீதமானோருக்கு (கிட்டத்தட்ட 600 மில்லியன் மக்கள்)மலசலகூடம் இல்லை. அனேகமானோர் திறந்த வெளியைப்பயன்படுத்த கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

ஆனால் , ஒரு கொழுப்பினை தளமாக கொண்டு இயங்கும் LIRNE ஆசியா எனும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப கற்கைகளுக்கான சிந்தனை தாங்கியின் தலைவரான கலாநிதி ரொஹான் சாமரஜீவா இந்த ஒப்பீடு முற்று முற்றிலும் தவறு என சுட்டிக்காட்டுகிறார்

இவர் சொல்கிறார் ஒரு தலைமுறைக்கு முன்,தென்னாசியாவில் கூடுதல் சிறப்புரிமை அளிக்கப்பட்ட ஒரு வீட்டுத்துறையில் ஒரு நிலையான இணைப்பு தொலைபேசியினை பகிர்ந்து கொண்டனர். அன்றிலிருந்து அதிகமான மாற்றத்துக்கு உள்ளாகியுள்ளது. தொலைபேசினை சொந்தமாக வைத்திருப்பதற்கும் பாவிப்பதற்குமான செலவீனமானது அதிகமாக குறைந்தது இது அதிகமான மக்கள், வறியர்கள் மத்தியில் ஒரு தொலைபேசியினை வாங்கி சொந்தமாக பயன்படுத்த முடிகிறது. அதிகமானோர் கையடக்க தொலைபேசியினை ஒரு தனிப்பட்ட கருவிகளாகவே பயன்படுத்துகின்றனர் (பகிரப்படாமல்).

2006 இலிருந்து ஆசிய மற்றும் தென்கிழக்காசியவில் LIRNE ஆசியாவின் பல நாட்டு, அதிக மாதிரி கணக்கெடுப்புக்கள், பல SIM அட்டைகளை சொந்தமாக வைத்திருக்கும் கையடக்க தொலைபேசி பாவனையாளர்கள் எண்ணிக்கையின் வளர்ச்சி எப்படியுள்ளது எனக்காட்டுகிறது. அவர்கள் பல்வேறுபட்ட கட்டணங்கள் மற்றும் தொகுப்புக்கள் என்பவற்றிலிருந்து பயனடைவதற்கு வலையமைப்புக்களுக்கிடையே பல்லிணைப்புக்களை பெறுகின்றனர்.

சமரஜீவா விளக்கியதை போல: "கையடக்க தொலைபேசிகள் தனிப்பட்ட கருவியாக இருக்கின்றன் மலசலகூடங்கள் பொதுவாக ஒரு வீட்டின் வசீகரத்தன்மையானது. மலசலகூடங்களின் எண்ணிக்கை பொதுவாக வீட்டிலிருப்பவர்களின் எண்ணிக்கையினை விட குறைவாகவே இருக்கின்றது. ஆகவே SIM அட்டைகளின் எண்ணிக்கையுடன் மலசலகூடங்களின் எண்ணிக்கையுடன் ஒரே கருத்தில் நேரடியாக ஒப்பிடுவதற்கு எந்த ஒரு வாய்ப்பும் இல்லை."

யாராவது ஒருவர் உண்மையாகவே முறையாக கையடக்க தொலைபேசியை மலசலகூடத்திற்கு ஒப்பிட வேண்டும் எனின், சமரஜீவா கேள்விக்கான பக்கத்திலிருந்து செயற்பட பரிந்துரைக்கிறார் : சனத்தொகை மதிப்பீடு அல்லது மாதிரி வீட்டு ஆய்வுகளின் பிரதிநிதி. நாடு முழுவதுமாக 22 500 வீட்டுத்துறை மாதிரிகளில் சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2009.∴10இல் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்துறை வருமானம் மற்றும் செலவீனம் பற்றிய மதிப்பீட்டில் திரட்டப்பட்ட தரவுகளை வைத்து இவர் இலங்கைக்காக ஒரு தரம் இதனை செய்திருந்தார். இதன்போது வசதியான மேற்கு மாகாணத்தில் குடியிருப்பாளர்களின் தனிப்பட்ட பயன்பாட்டிற்கான மலசலகூடங்களுடன் கூடிய குடியிருப்புக்களின் எண்ணிக்கையும் தொலைபேசிகளுடனான குடியிருப்புக்களின் எண்ணிக்கையும் ஏறத்தாழ சமமாக இருப்பதை கண்டுபிடித்தார்.


சில செயற்பாட்டாளர்கள் போல் மக்கள் கையடக்க தொலைபேசிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மலசலகூடங்களின் எண்ணிக்கையையும் வர்த்தகப்படுத்த விரும்புகிறார்கள் என்றால் அப்படியல்ல. நூற்றுக்கணக்கான மக்கள் மலசலகூட வசதியில்லாமல் இருப்பதற்கு அங்கே பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு காரணங்கள் இருக்கின்றன. கலாசாரமும் கல்வியும் ஒரு குறிப்பிடத்தக்க குறைந்த பங்கினை வகிக்கினறன.

பொது, தனியார் அல்லது தொண்டு பணத்தினை விசாரணை செய்வதற்கான ஒரு விடயமாக சுகாதாரம் இல்லை. இவற்றுள் வீட்டுரிமை, நிலவுரிமை மற்றும் நீர் வழங்கல் ஒரு பெரிய பிரச்சனை. தென்னாசியாவின் பல பகுதிகளில் உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது நகரங்களின் வளர்ச்சிக்கு பின்னால் தங்கியிருக்கின்றது

ஏழை மக்களுக்கு நிறைசெய்யப்படாத சுகாதாரத் தேவைகள் உண்மையாகவே ஒரு பெரிய கதைதான். அது அரசியல் கவனம், பிரயோக தொழில்நுட்பம் மற்றும் முதலீடுகள் போன்றசற்றுக்கும் உரித்துடையதாகும். நம்பத்தகாத ஒப்பீடுகள் மூலம் கையடக்க தொலைபேசிகளின் நிராகரிப்பானது ஒரு மேலான காரணமாக இருக்காது.

https://collidecolumn.wordpress.com/2012/11/25/when-worlds-collide-43-toilets-or-telephones-thats-the-wrong-question/-லிருந்து மாற்றியமைக்கப்பட்டது

# 8. புதிய வழி தேடுனர்களின் உள்ளுணர்வு: P. சைநாத்



P. சைநாத்

பழகும்மி சய்நத் இந்திய ஊடகவியலாளரும் புகைப்பட விளக்க ஊடகவியலாளரும் ஆவார். இந்தியாவில் ஊடகத் துறையில் முன்னுரிமை வழங்கப்படாத விடயங்களான சமூக பொருளாதார சமத்துவமின்மை கிராமிய விவகாரம், வறுமை, உலகமயமாக்கலின் பின்னரான விடயங்களுக்கு முக்கியத்துவமளித்தவராகக் காணப்படுகின்றார். இவருடைய முக்கியமான தேடல்களாக மனிதன் எதிர்கொள்ளும் வறுமை என்பதாகும். பொருளாதார நிபுணரும் நோபல் பரிசு பெற்றவருமான அமர்த்தியா சென் இவரை உலகில் உள்ள சிறந்த பஞ்சம் மற்றும் பட்டினி தொடர்பான ஒரு நிபுணர் என்கின்றார்.

1991இல் இந்தியா பொருளாதார தாராள மயமாக்கம் பெற்ற பின் ஊடகங்களின் முக்கியத்துவம் செய்தியிலிருந்து பொழுது போக்கு அம்சங்களும் பாவனையாளர் வாழ்க்கை நிலை நகர பிரமுகர்களின் செய்திகளை முக்கியமாக வெளிப்படுத்தின. ஏழைகளின் செய்திகளை ஊடகம் அரிதாகவே வெளிப்படுத்தியது. இவர் இந்திய ஊடகங்கள் மேல்நிலை மக்களின் 5% வெளிப்படுத்தியதாகவும் தான் கீழ் நிலை மக்களின் 5% வெளிப்படுத்தியதாகவும் குறிப்பிடுகின்றார்.

1993 இல் டைம்ஸ் ஒப் இந்தியா புலமைப்பரிசிலைப் பெற்றார். இந்தியாவின் 05 மாநிலங்களில் அதிகம் ஏழ்மையான 10 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்தார். இந்தியாவில் 100000 KM பயணம் செய்தார் இதற்காக 16 வகையான போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்தியுள்ளார். இரண்டு ஆண்டுகளில் நடைப் பயணம் மூலம் 5000 KM சென்றுள்ளார். 84ஆம் ஆண்டு டைம்ஸ் ஒப் இந்தியா இவரின் களம் சார்ந்தது. எழுதப்பட்ட கட்டுரைகளைப் பிரசுரித்தது. இவர் 1996இல் எழுதிய புத்தகமான ஒவ்வொருவரும் சிறந்த வரட்சியினையே விரும்புகின்றனர். (Everybody loves A Good Drought 1996) அதிக தடவை மீள்பதிவு பெற்றது.


ஏழை மக்களுடன் நேரத்தைச் செலவிட்டு அவர்களின் வாழ்க்கை நிலைகளை ஆராய்வது தொடர்பான எண்ணங்களை எழுதியுள்ளார். இவர் பல தரவுகளுடனான அறிக்கைகளை வாசித்தும் உண்மை கள நிலவரங்களோடு ஒப்பிட்டும் நோக்கியுள்ளார்.

அதிகமான கள விஜயங்களை விவசாயத்திற்கு செய்கை முடித்த பின்னரான பிந்திய காலத்திலேயே மேற்கொண்டுள்ளார். இவரின் முக்கியமான கேள்வியான விவசாய செய்கையில் ஈடுபடாத 200 - 240 நாடுகளில் ஒரு வருடத்தில் ஏழைகள் தமது பிரதேசத்தில் என்ன செய்கின்றார்கள்? எவ்வாறு வாழ்க்கை நடத்துகின்றனர்? அவர்களுடைய எதிர்பார்ப்பு உபாயம் என்ன? அவர்கள் விவசாயத்தில் ஈடுபடாத காலத்தில் அவர்களுக்கான வாழ்க்கை மாற்று உபாயம் என்ன என்பதாகும்.

இவருடைய சிந்தனை, செயன்முறையின் காலகட்டங்களின் தன்மை அதன் நிலமை மூலமாக வறுமை மற்றும் அந்நியமாதல் தொடர்பான விடயங்களை சுட்டிக் காட்டியுள்ளார். இதனை விட சில அனர்த்தங்கள் நிகழும் போது மக்கள் இறப்பு, மேலும் வறுமை மூலமான அதிக பட்டினி மூலமான இறப்பு நிலைகள் என்பனவாகும்.

எனவே பல நிலைக் காரணங்கள் இச் செயற்பாடுகளில் அதிக தாக்கம் செலுத்துகின்றது. இதனை வலயத்திற்கு வலயம், சமூகத்திற்கு சமூகம், கலாசாரத்திற்கு கலாசாரம் என்ற அடிப்படையில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இதனை விட இதில் பிரதான காரணிகளாக நிலம், சுகாதாரம், கல்வி, எழுத்தறிவு, பிறப்பு விகிதம், வாழ்க்கை எதிர்பார்க்கை என்பனவும், கடன், சொத்து, நீர்ப்பாசனம், குடிநீர், கழிவறை வசதி, தொழில் என்பனவும் தாக்கத்தைச் செலுத்தும் காரணிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் இவர் கட்டாயமாக ஒருவர் 2400 அல்லது 2100 கலோரி உணவு ஒவ்வொரு நாளும் பெற வேண்டும். இல்லையேல் மிகவும் வறுமை எனவும், இந்தியாவில் உள்ள பிரச்சினை சோமாலியா அல்லது எத்தியோப்பிய பிரச்சினைகளிலிருந்து வேறுபட்டது. எனினும் இங்கே பட்டினி வறுமை என்பது சிக்கல் தன்மை வாய்ந்தது. இங்கே உள்ள வறுமையினை வெளிப்படுத்தும் தொலைக்காட்சி, புகைப்படங்கள் எத்தியோப்பிய, சோமாலிய நிலையினை வெளிப்படுத்துதலைப் போல இங்கே வெளிப்படுத்தப்படுவதில்லை. இங்கே அது அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்படாது மறைத்து செய்யப்பட்ட விடயமாகக் காணப்படுகின்றது. பட்டினியில் இருப்பவர் போஷாக்கான ஊட்டச்சத்தைப் பெறுவதில்லை. சாதாரண தேவை உணவை விட சிறுவர்களுக்கு குறைந்தளவான உணவே கிடைக்கின்றது. குறைந்தளவான ஊட்டச்சத்து உள, உடலியல் ரீதியான வளர்ச்சியினை குறைவடையச் செய்து வாழ்க்கையில் பிரச்சினைகளை எதிர்கொள்ளக் காரணமாக உள்ளது. ஒவ்வொருக்குமான தேவைகளாக சுகாதார வசதிகள் கிடைக்காமல் விடினும் அதுவும் ஒரு பட்டினி என்கின்றார்.




சய்நத் கள அறிக்கை பல விடயங்களை ஆராய்ந்துள்ளது. இந்தியாவின் கல்வி, சுகாதார சேவைகளின் உண்மையினை வெளிப்படுத்தியுள்ளார். கிராமிய சிறு விவசாயிகள் எவ்வாறு கடனால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதனையும், நிச்சயமற்ற சந்தை விலைகள், ஏழைகளின் வாழ்க்கையை முன்னேற்றுவதில் சாதித்தடைகள், அதிகார கட்டமைப்புக்களின் தடைகள் பற்றிய ஆவணம், மேலும் இயற்கை அனர்த்தங்கள் வரட்சி மற்றும் வெள்ளத்தின் பாதிப்புக்கள் மக்கள் இதை எவ்வாறு சமாளிக்கின்றார்கள். கிராமிய மக்கள் காட்டு வளத்தினைப் பயன்படுத்துதல், பெண் உரிமை, வருமானம், சொத்து உரிமை தொடர்பான பரந்த கேள்விகளையும் எழுப்பியுள்ளார்.

சய்நத் கிராமிய அபிவிருத்தி எனும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பொது நிதி விரயம், ஊழல் பற்றியும் சுட்டிக்காட்டத் தவறிவிட்டார். (உதாரணம்)

- ஒரே ஒரு பழங்குடி நபருக்காக அமைக்கப்பட்ட வீதி.
- இரண்டு வருடத்தில் 20 மில்லியன் செலவு செய்த பால் உற்பத்தித் திட்டம் தோல்வி. மேலதிகமாகப் பாலைப் பெற முடியவில்லை.

இவர் பிரச்சினைகளை மட்டுமல்ல அதன் காரணத்தினையும் நோக்கியுள்ளார். மேலும் இவர் கிராமிய மக்களுக்காக தொண்டாற்றிய அரச சார்பற்ற நிறுவனங்கள் அவர்களின் பயனுள்ள திட்டங்கள் மேலும் மக்களுக்காக சேவையாற்றிய அரசாங்க ஊழியர்கள் அவர்களின் சேவைகள் என்பவற்றினையும் வெளிப்படுத்தியுள்ளார்.

தேசிய மற்றும் உள்ளூர் ஊடகவியலாளர்களின் மனப்பாங்கினையும் விமர்சித்துள்ளார். பிழையாக வழி நடத்திய அதிகாரிகள் மூலமாக இந்தியாவின் முன்னேற்றத்தில் ஏழைகளே தடையாக உள்ளனர் என்பதனை விமர்சித்துள்ளார்.

சய்நத் எழுத்து முக்கியமானது. இவர் எழுத்துக்கள் மூலமாக அரச அதிகாரிகள் வறட்சி முகாமைத்துவத் திட்டம் தமிழ் நாடு, ஒரிசாவில் ஆதி கால மருத்துவ முறை விருத்தித் திட்டக் கொள்கை, மத்தியப் பிரதேச பழங்குடி பிரதேச அபிவிருத்தித் திட்டம், இவரின் தூண்டுதலால் ஆந்திரப் பிரதேச விவசாய ஆணைக்குழுவினால் இதன் மூலம் இப் பிரதேசத்தில் விவசாயத்தினை மேம்படுத்தும் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

சய்நத் எழுத்துக்களால் கவரப்பட இந்திய இளம் ஊடகவியலாளர்கள் நகரத்தை விட்டு வெளியே சென்று இந்தியாவின் கஸ்டப் பிரதேசங்களின் மக்களுடன் கதைத்து செய்திகளை அதிகமாக ஏழை மக்கள் வாழும் கிராமங்களிலிருந்து வெளிப்படுத்தினார்.

"ஒவ்வொருவரும் சிறந்த வறட்சியினை வரும்புகின்றனர்□ எனும் நூலின் 34வது பதிவு, இதனை 100 பல்கலைக்கழகங்கள் இந்தியாவிலும் வெளிநாட்டிலும் பயன்படுத்துகின்றன. 19ஆம் நூற்றாண்டுகளின் பிற்பகுதியில் நிகில் சக்கரவர்த்தி இந்தியாவின் மூத்த பதிப்பாசிரியர் சய்நத்தின் பணி □இந்தியாவின் மனசாட்சி" எனப் பாராட்டியுள்ளார்.

2007இல் சய்நத்திற்கு ராமன் மக்சயசேய விருது கிடைத்தது. இது ஆசியாவின் கௌரவம், ஆசிய நோபல் பரிசுக்கு சமமானதாகும். இது ஊடகம், இலக்கியம், படைப்பு, கலை போன்றவற்றுக்கு வழங்கப்படுவது. இது இந்திய கிராமிய மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துதல் தொடர்பான நடவடிக்கையை மேற்கொண்டமைக்காக வழங்கப்பட்டது.

உசாத்துணை விபரம்
http://psainath.org/about-p-sainath/about/
https://en.wikipedia.org/wiki/Palagummi_Sainath
http://www.thehindu.com/opinion/columns/sainath/

# 9. புதிய வழி தேடுனர்களின் உள்ளுணர்வு: கல்பனா சர்மா

ஊடகவியலாளர்கள் நல்லவர்கள் அல்லது கெட்டவர்கள், தொழில் நிபுணத்துவம் உள்ளவர்கள் அல்லது தொழில் நிபுணத்துவம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். “சூழலில் அல்லது “அபிவிருத்தியில்” போன்று எனக்கு பிறர் அடையாளப்படுத்துவது நிச்சயமில்லை. இதனை விட ஊடகவியலாளர்கள் என்பது கட்டாயம்.

இதனை இந்தியாவில் பல தசாப்த காலமாக அபிவிருத்திக்கும் சமூக நீதிக்குமான விடயங்களை முன்னிலைப்படுத்திய இந்தியாவின் அதிக அனுபவம் வாய்ந்த கல்பனா சர்மா அவளுடன் நடந்து கொண்டு கதைத்தல் என்பது ஒவ்வொரு ஊடகவியலாளருக்குமான முக்கியமான வழிகாட்டல் ஆகும்.



கல்பனா சர்மா

இவர் ஒரு சிறந்த புதிய வழிகளை இந்தியாவில் அபிவிருத்தி சம்பந்தமான விமர்சன முறையில் ஆராய்வதே முக்கியமான ஊடகவியலாளராக தனது பார்வையைச் செலுத்தியுள்ளார்.

இவர் தனது காலப்பகுதியில் டைம்ஸ் ஒப் இந்தியா, இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் ஹிமண்ட் வாராந்த செய்திப்பத்திரிகை (1964 - 1981) ஓய்வு பெறும் பொழுது இந்து நாளிதழில் பிரதி பதிப்பாசிரியராகக் கடமையாற்றியுள்ளார். முக்கியமான ஊடகங்களினால் வெளிக்காட்டப்படாத, கண்டு கொள்ளப்படாத விடயங்களுக்கு முன்னுரிமையளித்துள்ளார். இன்னொரு இந்தியாவை வெளிக்காட்டினார்.

இன்னொரு இந்தியா என்பதில் 400 மில்லியன் மக்கள் ஒரு நாளைக்கு 1.25 அமெரிக்க டொலர் வருமானம் என்ற உலக வறுமை நிலையில் வாழ்வதனை வெளிக்கொணர்ந்தார். இதில் இந்தியா உலகநாடுகளில் மூன்றாம் இடம் என்பதனை வெளிப்படுத்தினார்.


முக்கிய பிரபலமான ஊடகங்களினால் கைவிடப்பட்ட ஏழை மக்களின் விடயங்களை விருப்பத்துடன் வெளிப்படுத்தினார். இதன் மூலமாக மக்களுக்கு சமூக நீதி கிடைக்கப் பாடுபட்டவர்.

ஆணாதிக்கம், பெண் குழந்தை, விவசாயிகள் தற்கொலை, சமய அடிப்படை வாதம் பற்றிய பிழையான கருத்தியல்களைத் தெளிவுபடுத்தி சரியான விளக்கத்தினை வழங்கியவர். ஆதிகமாக களத்திற்குச் சென்று ஆய்வாளராக, செயற்பாட்டாளராக தரவுகளைப் பெற்றவர்கள் எப்பொழுதும் தனது கண்களையும், காதுகளையும் அகலத் திறந்தே வைத்திருந்தார். இவருடைய அறிக்கையிடல் ஆரம்ப நிலையான பூச்சிய நிலையில் இருந்து மோதல்கள், அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமை, அவர்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்தினார்.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை செய்தித் தலையங்கங்களாகவே காணப்பட்டது. தேர்தல் காலத்திலே மாத்திரம் ஏனைய நேரங்களில் மௌனமாகக் காணப்பட்ட விடயங்களை ஊடகம் மூலம் வெளிப்படுத்தி முக்கியத்துவப்படுத்தினார்.

பிற ஊடகங்களினால் தவறவிடப்பட்ட முக்கியமான விடயங்களை வெளிப்படுத்தினார். இவர் பாதிக்கப்பட்ட மக்களினை சுரண்டவில்லை. குறிப்பிட்ட பிரதேசத்திற்கு மாதம் அல்லது ஆண்டுகளாகத்

தொடர் விஜயங்களைத் தொடர்ச்சியாகச் செய்து வந்தவர்.




அனர்த்தத்திற்குப் பிந்திய விடயங்களைப் பகுதியாக ஆசிய பசுபிக்கினால் வெளியிடப்பட்ட புத்தகத்தில் தொடர்புகொள்ளும் அனர்த்தங்கள் என்ற பெயரில் வெளிக்கொண்டு வந்தார் (வுஏநுயீ ரூ ருனேீ,2007). அனர்த்தம் தொடர்பாக தாம் காண்பதனை ஊடகவியலாளர்கள் அப்படியே வெளிப்படுத்தினார்கள். ஆனால் இவர் தன்நோக்கில் அனர்த்தத்திற்கான காரணம் என்ன? அனர்த்தத்திற்கு முன் அப்பிரதேச நிலமை? மக்கள் குழுக்களுக்கிடையேயான சமூக உறவுகளின் நிலை? அரசாங்கத்துடனான தொடர்பு? கைவிடப்பட்ட மக்கள் தொடர்பான தகவல்கள் என சகல விடயங்களும் ஆராயப்பட வேண்டும் எனக் கூறினார்.

இவர் ஏழைப் பெண்களின் நிலை தொடர்பாக அதிக கவனம் செலுத்தினார். பெண்கள் ஓரங்கட்டப்படல், அவ்வாறானவர்களின் நிலை என்ன என்பதனையும் வெளிப்படுத்தி.

வெளித் தெரியாத சக்தியுடைய பெண், அதன் மறைவு நிலை சமூக ஏற்றத் தாழ்வுகளை விளக்கியுள்ளார். பல சமூகங்கள் மற்றும் உற்பத்தி முறைகள், வீட்டு வேலை, பிள்ளை பராமரிப்பு, குப்பை அகற்றல், விவசாயம், இவற்றினைப் பெண்கள் செய்தனர். எனவே பெண்களின் நிலை பற்றிக் கேள்வி எழுப்பியுள்ளார்.

19 வருடங்கள் கல்பனா இந்து இதழில் எழுதி பிற பகுதி என்னும் இரு கிழமை பந்தியில் சமகால விடயங்கள், அரசியல், கலாசாரம், விளையாட்டு, சூழல், பால்நிலை என்பன தொடர்பான முக்கியமான விடயங்களையும் அதன் நோக்கம் என்பன பிற எழுத்தாளர்களை விட வேறுபட்ட விதத்தில் விளக்கியுள்ளார்.

இவர் கிராமம் மட்டுமல்ல இந்தியாவின் மும்பை மக்களுடன் கதைத்து, மக்கள் வாழ்க்கை, வறுமை, பால் நிலை, சூழல் பிழைகள், அரசாங்கம் சார் செயற்பாடுகளையும் விளக்கியுள்ளார். இவர் 2000ஆம் ஆண்டு எழுதிய மும்பையின் டாராவி சேரி (Dharavi slum in Mumbai) ஆசிய மக்களின் நிலையினைக் காட்டுகின்றது. சமூக நீதி கிடைக்கப்பெறவில்லை என்பதனை வெளிப்படுத்துகின்றது. டாராவியை மீண்டும் கண்டுபிடித்தல் என தலைப்பிடப்பட்ட புத்தகம், "ஒரு விவேகம் , மனிதன், நிலத்தில் இருந்து எழுதுதல்" என அழைக்கப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்ட சேரிப்புறத்தில் உள்ளவன் கோடீஸ்வரனாகுதல் (Slumdog Millionaire) பிரபலமானது.

கல்பனா சர்மாவின் படைப்புக்கள் பொருளாதார, அரசியல் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

உசாத்துணை விபரம்

Kalpana Sharma's blog http : //kscribe-kalpanasharma.blogspot.com/
The Hindu Columns archive : http://www.thehindu.com/opinion/columns/Kalpana_Sharma/

## ஊடகத்தில் ஏழைகளை எப்படி சிறப்பாக சித்தரிக்க முடியும்?

*Slumdog Millionaire* இன் கதையானது, மும்பையின் சேரியிலிருந்து கல்வி கற்காத இளைஞர் இந்திய தொலைக்காட்சியில் *யார் கோடீஸ்வரராக வரவேண்டும்?* (Kaun Banega Crorepati) எனும் நிகழ்ச்சியில் தோன்றி அந்த விளையாட்டு நிகழ்ச்சியில் இறுதிக் கேள்வி வரைக்கும் நன்றாக பதிலளித்தார். இதன்போது அவர் ஏமாற்றுவதாக பொலீஸ் சந்தேகப்பட்ட கதையாக அமைகிறது.

சில இந்தியர்கள், மும்பை சேரியில் கதைகளுக்கான இடத்தினை தெரிவு செய்வதும் படமாக்குவதன் மூலம் அவர்களுடைய நகரத்தை ஒட்டிய அசுத்தமான நகரங்கள் பெருகிக்கொண்டிருக்கின்றன என நினைக்கிறார்கள்.

“இத்திரைப்படம் மூலம் உலகநாடுகள், சேரி மக்களுடைய வாழ்விற்கு சுத்தமாக குடிநீர், சுகாதாரம், மின்சாரம் இல்லாத போது, இந்திய குடியிருப்புக்கள் மீது தமது கண்ணோட்டத்தினை செலுத்துவதால் என்ன பயன்? என அவர் கேட்டார்.

2009 இல் ஜனவரியின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட “மனதின் சேரிப்பகுதி” என தலைப்பிடப்பட்ட கட்டுரையின் கண்கோட்டத்தில், கல்பனா முக்கியமான கவலையை வெளிப்படுத்தினார். “Slumdog Millionaire” இன் வெற்றி பல கேள்விகளை எழுப்புகிறது. எழுத்தாளர்கள், திரைப்பட தயாரிப்பாளர்கள், மற்றும் ஊடகவிலாளர்கள் ஆகிய நாங்கள் வறுமையினை எவ்வாறு சித்தரிக்கப்போகிறோம்? எல்லா நேரங்களிலும் எங்களுக்கு முழுமையானதும், சீரானதும், உணர்வுபூர்வமானதுமாக கொடுப்பதற்கு எதிர்பார்ப்பது நியாயமானதா? அல்லது எமது பார்வையாளர்களுக்கு எழுதுவது, படமாக்குவது தவிர்க்க முடியாதா? மற்றும் ஒரு உப உற்பத்தியாக மக்கள் உணர்திறனுடன் இருக்கிறார்கள் என்றால் அதன்படியே இருப்பது மேலும் அவர்கள் எரிச்சலடைகிறார்கள் என்றால் அதன்படியே இருப்பது, நாங்கள் சுரண்டப்படுவதாக உணர்ந்தால் அதன்படியே இருப்பது”

“இறுதியில் ஒரு எழுத்தாளராக, ஒரு ஊடகவியலாளராக அல்லது திரைப்பட தாயாரிப்பாளராக உணர்ந்துகொள், அது நீங்கள் சிறப்பாக ஒரு பிரச்சனையை பிரகாசிக்க வைக்கவும், ஒரு வெளிச்சத்தை ஏற்படுத்தவும் ஆதிக்கம் வெசலுத்த வைக்கும். ஆனால் ஒரு தீர்வினை இலகுவாக காணமுடியாது. அதற்காக, பல படிமுறைகளை எடுக்க வேண்டியிருக்கிறது.

“*Slumdog Millionaire*” அறிவியல் வேலையின் மூலம், இந்தியாவின் சேரிச் சிறுவர்கள் மீது ஒரு பார்வையினை செலுத்த வைத்திருக்கிறது. அறிவியல் இல்லாமல் இருக்கும் அவர்களுடைய எதிர்காலத்தை மாற்றுவதற்கு நாங்கள் என்ன செய்கிறோம் என்பது இன்னும் எழுதப்பட வேண்டியிருக்கிறது.”

முழுமையான வாசிப்பிற்கு : http://indianexpress.com/article/opinion/columns/shantytowns-of-the-mind/

centre for poverty analysis

அட்டைப்புகைப்படம் காயத்திரி லொகுகே

29, R. G. Senanayake Mawatha,
Colombo 7, Sri Lanka.

T +94 (011) 4690200, 2676955
F +94 (011) 2676959
E info@cepa.lk
W www.cepa.lk

UNESCO